

# மற்றவர்களுக்காக இரத்தம் சிந்திய கிறிஸ்துவின் மேல்... இப்போது மற்றவர்களின் குருதி சிந்துகின்றது....

–மு.சேவியர் சந்திரகுமார்





மனுஷ்யபுத்திரன்




ஜூனியர் விகடன் அட்டைப்படம்

“இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு நிஜமாகவே இரத்தம் சிந்தும் ஒரு கிறிஸ்துவை இப்போதுதான் பார்க்கிறேன்...”என்று தனது நாத்திக இதயத்திலிருந்து கருத்துக் கவிதையின் ஆரம்ப வரிகள் மூலம், கண்ணீரை மழையாகக் கொட்டுகிறார் மனுஷ்ய புத்திரன்.

யாருக்கென்ன வந்தது என்று, தான் தோன்றித்தனமாக எழுதும் ஏராளமான பத்திரிக்கைகளின் மத்தியில் கிறிஸ்துவின் ஆணிபாய்ந்த கரங்களினால் ஆசியளிப்பது போன்ற இயேசுவின் படத்தை தனது அட்டைப் படமாக்கி தனது ஈர நெஞ்சத்தைக் காட்டியது ஜூனியர் விகடன் பத்திரிக்கை!

ஆங்காங்கேயுள்ள இஸ்லாமியத் தலைவர்கள் கிறிஸ்தவர்களின் மனதை எப்படி ஆற்றுவது... தனது சமுதாயத்துக்கு தீராத களங்கத்தை தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தமது சமுதாய தீவிரவாத அரக்கர்களை எப்படித்தான் அடக்குவது என்று இருதலைக் கொள்ளி எறும்பு போன்று செய்வதறியாது திக்குமுக்காடிப் போன நிகழ்வுகளையும் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் காண முடிந்தது...!



உலகமே கண்ணீர் விட்டு அழுதது...! அன்றாடம் நடக்கும் சாதாரண சாவுகளினால் ஏற்படும் பிரிவினைக் கூட தாங்காத உள்ளங்கொண்ட மனித மனம், இதுபோன்ற நெஞ்சைப் பதறவைக்கும் சம்பவத்தைக் கண்டு துடிதுடித்துப் போகாதா என்ன...?

இத்தனை சோகங்களின் அலறலினூடே, தனது குரூர, பாசிச எண்ணங்களை, இயல்பாக வெளிக்கொணரும் வகையில் “**ஓ... சேசப்பா...**” என்று முதற்பக்கத் தலைப்பிட்டு தனது மகிழ்ச்சியை வெளிக்கொணர்ந்த ‘தினமலர்’ பத்திரிக்கையின் சுயரூபத்தையும் தமிழ் மக்கள் பார்க்கத்தான் செய்தார்கள்.

என்னதான் நடந்தது...?

நாற்பது நாள் கொண்ட தவக்காலத்தில் சிறியது முதல் பெரியது வரையிலான ‘ஒறுத்தல்’ முயற்சிகளைச் செய்து, தனது பாவக்கரை படிந்த எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் மன்னிப்புக் கோரி, தத்தமது இதயங்களைச் சுத்திகரிப்பு செய்யும் வாய்ப்பாகத்தான் உலகக் கிறிஸ்தவர்கள் ஏப்ரல் மாத நாட்களைப்

## யாரிடம் செல்வோம் இறைவா...







பார்க்கிறார்கள்.

இதன் உச்சகட்டமான கிறிஸ்து உயிர்தெழுந்த அந்த நாளுக்காக காத்திருந்து, சுத்தம் செய்யப்பட்டு வீரியம் கொண்ட மனத்துடன் குடும்ப உறுப்பினர் சகிதமாக ஆலயம் நோக்கி நடைபோட்டு, அந்த கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்கேற்று தூய்மை பெறுவதற்காக, உலகக் கிறிஸ்தவர்கள் செல்லுவது போன்று தான், ஸ்ரீலங்கா கிறிஸ்தவர்களும் ஆலயம் நோக்கிச் சென்றார்கள்!!.

"உயிர்த் தெழுந்தாரே அல்லேலூயா... ஜெயித்தெழுந்தாரே..." என்று கைதட்டி குரலெடுத்துப் பாடுவதாக சென்றவர்களின் உயிரே சற்று நேரத்தில் போகப் போகிறது என்பதை மட்டும் அவர்கள் உணரவில்லை என்பது தான் சோகம்...!

கண நேரத்தில்.. என்ன நடந்தது என்று சிந்திக்கக் கூட இயலாத அந்த மணித்துளியில், இரத்தமும் சதையும், கூழாக்கப் பட்டு, ஆலயச் சுவர்களில் மோதி வழிந்து சின்னா பின்னாமாகச் சிதறினர் ஆலயத்துக்கு வந்த கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய இறை மக்கள்!

நீர்க்கொழும்பு புனித செபஸ்தியார் ஆலயம், மட்டக்கிளப்பு சீயோன் ஆலயம் உட்பட எட்டு இடங்களில் அடுத்தடுத்து கொடூர குண்டுகளை இயக்கி ஆங்காங்கே நாசகார நிகழ்வுகளை நிகழ்த்தியிருந்தார்கள், வெளிநாட்டு உதவியுடன் கூடிய உள்ளூர் இஸ்லாமிய தீவிரவாதிகள்...!

முன்னூற்றுக்கும் மேற்பட்டோர் உரியிழந்து ஐந்நூறுக்கு மேற்பட்டோர் உடலுறுப்புகளை இழந்து பத்தாயிரத்துக்கு மேற்பட்ட உடன் பிறந்தவர்களின் இதயங்களை சுக்கு நூறாக்கி, 300 கோடி உலகக் கிருஸ்தவர்களது மனங்களை உடைத்து அகில உலகமே கண்ணீரில் நனைய, விரல் விட்டு எண்ணக்கூடிய இந்த தீவிரவாதிகள் மட்டும் துள்ளிக் குதித்து ஆடிப்பாடி செய்ய இயலாத சாதனையைச் செய்து முடித்த சந்தோஷத்தை பகிர்ந்து கொண்டார்கள் என்பது தான் கசப்பான உண்மை!

ஏன் கிறிஸ்தவர்களை இலக்காக்க வேண்டும்..? இப்படிப்பட்ட நல்ல நாளில், இப்படிப்பட்ட இன மக்களை, இந்த விதமாக பலியிட்டால்தான் உலகமே பேசும் பொருளாக மாறும் என்பதற்காகவா கிறிஸ்தவர்களை இரையாக் கினார்கள்....?

அதுவும் தமிழ் கிறிஸ்தவர்கள், பங்கு பெறும் அந்தக் குறிப்பிட்ட நேரத்தை தேர்ந்தெடுத்து கனகச்சிதமாக செய்ய நினைத்ததைச் செய்து தனது இலட்சியத்தை நிறைவேற்றி யிருக்கிறார்களே... அது ஏன்..? தமிழர்கள் மேல் என்ன குறி..? இங்குதான் ஏதோ உதைக்கிறது...!

ஏற்கனவே இலங்கை அதிபர் மைத்ரி பால சேனாவுக்கும், இலங்கை பிரதமர் ரனில் விக்ரம சிங்கேயுக்கும் குடுமி பிடிச் சண்டை.

பிரதமரான ரனில் விக்ரம சிங்கேயை கழுத்தைப் பிடித்து பதவியிருந்து விலக்கி வைத்துவிட்டு, அந்த பதவியில் ஒன்றறை லட்சம் தமிழரை கொன்று குவித்த ராஜபக்சேயை சில மாதங்களுக்கு முன்னர் பிரதமராக்கி, சிரிசேனா நாடகமாடிய காட்சிகளை உலகமே பார்த்திருந்தது என்பதை இங்கு நினைவு கூறத்தான் வேண்டும்!

## ஆறுதல் கூற வார்த்தை இல்லையே...









செபிக்கிறோம் தேவா...!









நீதிமன்றம் சென்று, தான் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து வழக்காடி, மீண்டும் அந்த பதவியைப் பிடித்து வெற்றி கண்டவர் இந்த ரனில் விக்ரம சிங்கே...!

இவரது ஆட்சியில் இதுபோன்று நடந்தால்தானே, மக்களுக்கும் உரைக்கும் என்ற ராஜபக்சே மற்றும் மைத்திரி சிறிசேனா ஆகிய கூட்டுக் சதிகாரர்களின் திட்டமும் இந்த நிகழ்வுகளுக்கான காரணங்களுள் ஒன்றா...?

இப்படி ஆளுக்கொரு அனுமானங்களும், கணக்குகளும் உலக அரசியல் ஆய்வாளர்கள் வைத்திருந்தாலும், நடந்ததென்னவோ அது, மன்னிக்க இயலா மாபெரும் ஈனத்தனமான செயலாகும்..!

ஏற்கெனவே அமெரிக்க உளவுத்துறையும், இந்திய உளவுத்துறையும் கூட நடக்கப் போவதை முன்னறிவித்துங்கூட, அதனைத் துளியும் சட்டை செய்யாதது இலங்கை அரசியல்வாதிகளின் குற்றமா...?

ராணுவக் கட்டுப்பாட்டுடன் இயங்கும் இலங்கையில் இப்படியொரு





கண்டிக்கிறோம்...!

பெரிய நிகழ்வு நடந்ததென்றால், நிச்சயமாக உள்நாட்டுக் குழுக்களின் தலைமையில் மட்டுமே இது நடந்திராது.

இஸ்லாமியருக்கும் பௌத்தருக்கும் சண்டை சச்சரவுகள்,சிங்களர் கிறிஸ்தவர்கள் மோதல், சிங்கள பௌத்தவர்கள் மோதல் என்று பல்வேறு விதமான மோதல்கள் இருந்துதான் வருகின்றன. இருப்பினும் இந்தக் குழுக்கள் தற்கொலைப்படைத்





தாக்குதலை திட்டமிட்டிருக்க வாய்ப்பில்லை என்பதே தற்போது உலவும் கூற்று..!

ஆக, இத்தகைய மாபெரும் நாசகார செயலை வேறு யார்தான் செய்திருக்க முடியும், வெளிநாட்டு ஐ. எஸ். ஐ. எஸ். தீவிரவாத குழுக்களைத் தவிர..?

திட்டமிட்டவர்கள் அவர்கள்.... செயல்படுத்திக் கொடுத்தவர்கள் உள்ளூர் தீவிரவாதிகளும் அரசியல் வாதிகளுமா.. இப்படி நீழுகிறது ஆராய்ச்சிகள்! இப்பொழுது, ஆரம்பக்கவிதையின் இன்னொரு பகுதிக்கே மீண்டும் வருவோம்.

"தன்மேல் தெறித்த சூடான குருதியில் திடுக்கிட்டு கிறிஸ்து முதன்முதலாக கண்விழிக்கிறார்"

"கிறிஸ்துவைப்போல ரத்தம் சிந்தியவர்கள் ஏராளம்
கிறிஸ்துவுக்காக ரத்தம் சிந்தியவர்கள் ஏராளம்
கிறிஸ்துவின் பெயரால் ரத்தம் சிந்த வைக்கப்பட்டவர்கள் ஏராளம்"

**"மற்றவர்களுக்காக ரத்தம் சிந்திய கிறிஸ்துவின் மேல் இப்போது மற்றவர்களின் குருதி சிந்துகிறது"** •

துணையிருக்கிறோம்...!













# இயேசுவின் நாமத்தால் இறந்தும் உயிரோடெழுப்பப்பட்டவர் 400 பேர்..!

## உலக அதிசயங்களின் சிறு தொகுப்பு

கோடி அற்புதர் அந்தோனியார் எல்லோருக்கும் தெரிந்தவர். எவ்வாறு புனித அந்தோனியாரை, கத்தோலிக்கத் திருச்சபை புனிதராக அங்கீகரித்திருக்கிறதோ, அதேபோன்றே உலகமெங்கும் இதுவரை புனிதர்களாக அறிவிக்கப்பட்டிருப்பவர்கள் ஒன்றல்ல இரண்டல்ல...! சுமார் பத்தாயிரம் பேர்...!!!

இவர்களுள் சுமார் ஐம்பது புனிதர்கள் செய்த ஆயிரக்கணக்கான அற்புதங்களில் நாம் இங்கு குறிப்பிடுவது, உயிர் முற்றிலுமாக அடங்கி இறந்தவர்கள், உயிரோடெழுந்த சுமார் 400க்கு மேற்பட்ட சம்பவங்களாகும். இந்த மாபெரும் அற்புதங்களைச் செய்த புனிதர்களின் பெயர்களை அருகில் காணலாம்.

இவர்களுள் யாரைப்பற்றி எழுதுவது...? எழுத ஆரம்பித்தால் லட்சக்கணக்கான பக்கங்கள் வேண்டும்!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம் என்பது போல இங்கு ஒரேயொரு புனிதர், அதுவும் இந்தியாவுக்கு கிறிஸ்துவின் போதனைகளை முதலில் எடுத்துச் சொன்ன இயேசுவின் சீடர்களுள் ஒருவரான புனித தாமஸுக்கு அடுத்தாக, நெஞ்சம் நிறைப்பவர் புனித பிரான்சிஸ் சேவியர்.

இறந்தவர்களை உயிரோடெழுப்பிய ஐம்பது பேரில் இவரும் ஒருவர் என்பதால், சற்றே விரிவாக இந்தப் புனிதரைப்பற்றி பார்க்கலாம்.



கோவாவில் உள்ள புனித பிரான்சிஸ் சேவியர் (சவேரியார்) ஆலயம்



போர்ச்சுக்கல் நாட்டை ஆண்டு கொண்டிருந்த ஜான் என்ற அரசன் இறை இயேசுவின் மேல் தீராதபற்று கொண்டவர். அவர் ஒருமுறை அப்போதிருந்த போப்பாண்டவரிடம் ஒரு வேண்டுகோளை வைத்தார். ஆசியாக்கண்டத்திற்கு ஆறு நபர்களை அனுப்பி இறைவனது நற்செய்தியைப் பரப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதே அவரது கோரிக்கை!

புனித பிரான்சிஸ் சேவியர் (சவேரியார்)





அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட போப்பாண்டவர், கடைசியில் இரண்டு பேரை மட்டுமே ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகளுக்குச் செல்லஅனுமதித்தார்.

அவர்கள்தான் புனித பிரான்சிஸ் சேவியர் மற்றும் போபாடில்லா ஆகிய இருவராகும். அதில் போபாடில்லாவுக்கு திடீரென உடல் சுகவீனமானதால் அவரால் பயணம் மேற்கொள்ள இயலவில்லை!

ஆக, பிரான்சிஸ் சேவியர் மட்டுமே இந்தப் பணிக்கென தன்னந்தனியாகப் புறப்பட்டார். 900 பேர் கொண்ட குழுவும் அவர் சென்றகப்பலில் இருந்தனர். 13

## யார் புனிதர்...?

வருங்கால நிகழ்வுகளை இறைவனருளால் உலகுக்கு உணர்த்துபவர் சன்னியாசி (seer). காட்சிகள் மூலம் குறிப்பிட்ட விஷயங்களை அவ்வப்போது வெளிப்படுத்துபவர் தீர்க்கதரிசி (prophet).

பாவச்சேற்றிலிருந்து விடுபட வழிமுறைகள் கூறி உணர்த்துபவர் மீட்பர் (Saviur).

ஒரு சராசரி மனிதனுக்கும் இறைவனுக்கு மிடையேயுள்ள உறவைத்தாண்டி, பிரத்தியேகமான புனித உறவை இறைவனிடம் கொண்டோரே புனிதர்.

வாழும் பொழுதும், இறந்த பின்னரும் இறைவனோடு இருபத்தவரும், இருப்பவரும்தான் புனிதர்! புனிதத்தின் தன்மை அவர் வெளிப்படுத்தும் செயல்களின் மூலம் வெளிப்படும்.

அவர்மூலம் மனிதனின் வாழ்வில் மனமாற்றமோ, உறுப்புக் குறைபாடுகளின் நீக்கமோ ஏற்பட்டிருந்தால் அவரே புனிதர்.


இயேசு உலகுக்கு வந்த நோக்கமே மக்களை பாவத்திலிருந்தும், கட்டுகளிலிருந்தும் மீட்கவேயாகும். அந்த மீட்புப்பணியில், நாளும் உதவுபவரே, புனிதர்! அற்புத அடையாளங்களை வாழும் பொழுதும், இறந்த பின்னரும் செய்பவரே புனிதர்.

கத்தோலிக்க மதத்தில் மொத்தத்தில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட புனிதர்கள் உள்ளனர்.

மாதங்கள் கப்பல் பயணித்து ஒரு வழியாக ஒரு கடற்கரையில் ஒதுங்கியது.

அதுதான் இந்தியாவிலுள்ள கோவா! வந்தவர் சுமார் ஐந்து மாதங்கள் கோவாவிலேயே தங்கினார். அவரது இந்த பயணத்தினூடே தமிழ்நாட்டின் தெற்கு கரையோர எல்லையான கன்னியாகுமரிக்கும் சென்றார்.


அற்புத மழையைப் பொழிந்தார். பல மொழிகளில் பேசினார், நடக்கப் போவதை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசனம் உரைத்தார். கடலை அடக்கினார். அவரது இந்த செயல்களினூடே அவரை அன்போடு நாடிய மக்களையும்



## இறந்தவர்களை உயிரோடெழுப்பிய புனிதர்களின் பெயர்ப்பட்டியல்...

புனித பிரான்சிஸ் பவுலோ, புனித பிரான்சிஸ் சேவியர், புனித ஜோசப் குப்பார்ட்டினோ, புனித பெனாட்டினோ, புனித பீட்டர் அல்காண்ட்ரா, புனித டோமினிக், புனித இக்னேஷியஸ் லயோலா, புனித பிலிப் நேரி, புனித சிலுவை பவுல், புனித டொன்போஸ்கோ, புனித ஆக்னஸ், புனித மார்க் மெடோனா, புனித ரோஸ்லிமா, புனித மார்ட்டின் போரஸ், புனித பிரான்சிஸ் சோலன்1, புனித செபஸ்டின், புனித ஜேம்ஸ் டேரண்டைஸ், புனித சிரில், புனித பெரக்ரைன், புனித ஜெரால்ட் மஜெல்லா, புனித பெலிக்ஸ், புனித பியோ, புனித லூயிஸ் பெர்நார்ட், புனித ஜான் பிரான்சிஸ் லியோ, புனித ஆன்ட்ரூ போபல்லா, புனித பேட்ரிக்!

இதுதவிர வேறுசில புனிதர்களும் உண்டு. புனிதர் பட்டத்துக்கு முந்திய பட்டமான "ஆசிர்வதிக்கப்பட்டவர்" என்ற பட்டத்தைப் பெற்ற சுமார் 15 பேருங்கூட இறந்த மனிதனை உயிர்தெழ வைக்கும் இறைவனது கொடையைப் பெற்றிருந்தனர்.



புனித பியோ



புனித எப்பா



புனித மரிய வியான்னி

பார்த்தார். அவரை வெறுத்து எதிர்வினை ஆற்றியவர்களையும் பார்த்தார்.

செல்லுமிடமெல்லாம் மக்கள் கூட்டங் கூட்டமாக மனம் மாறினர். மொத்தத்தில் சுமார் ஒரு இலட்சம் பேரை மனமாற்றி அவர்களுக்கு ஞானஸ்தானம் கொடுத்த கைதான் பிரான்சிஸ் சேவியருடைய கை!

அதனால்தானோ, என்னவோ அவரது கை இன்று வரை அழியவில்லை, அவரது உடலுடன் சேர்த்து...! கோவாவில் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை அவரது அழியாத உடலை இன்றும் காட்சிப் படுத்துகிறார்கள்.

இவையெல்லாம் இறைமகன் இயேசுவின் பலத்தால் மட்டுமே சாத்தியமாயிற்று!

குருவானவரான பிரான்ஸிஸ் சேவியர் செய்த ஏராளமான அற்புதங்களில், பல இறந்தவர்களை உயிரோடெழுப்பியதாகும்.

ஒருமுறை



கொம்புட்டூர் என்ற கிராம தேவாலயத்தில் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

பலிபூசைநடந்து கொண்டிருக்கும் போதே ஒரு கூட்டம் கோயிலுக்குள் நுழைந்தது. இறந்தது ஒரு சிறுவனின் உடலைபூசை நேரத்திலேயே, அவரது காலடியில் கொண்டு கிடத்தியது அந்தக்கூட்டம்.

இறந்த சிறுவன் ஏற்கனவே, அவரால் ஞானஸ்தானம் கொடுக்கப் பட்டவன்! புனிதர் குனிந்து, இறந்தவரைத் தொட்டுத் தூக்கினார். இறந்த சிறுவன் உயிரோடெழும்பினான்.

அவரோடு இரண்டு உபதேசியார் பயணித்தனர். அவர்களுள் ஒருவர் பாம்பு கொத்த அங்கேயே பிணமானார் ஒருவர்! தனது நாவிலிருந்து ஒரு விரலால் உமிழ்நீரை எடுத்து, இறந்தவர் உடலில் சிலுவை அடையாளத்தை வரைய இறந்தவர் உயிர்பெற்றார்.

மற்றொருமுறை முட்டன் என்பவரின் உடலைத் தூக்கிக் கொண்டு வந்து, புனிதரிடம் கெஞ்சினர்...மக்கள். அந்த நாட்டில் அக்காலத்தின் வழக்கப்படி அவனது உடல் முழுவதும் துணியினால் சுற்றப்பட்டிருந்தது!

இரத்தம் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார் கோஸ்ட்டோரிக்கா நாட்டைச் சேர்ந்த ப்ளோரிபத் மோரா டயஸ் என்ற பெண்.

நாட்கணக்கில்தான் அவரால் உயிர்வாழ முடியும் என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். படுத்த படுக்கையாக, கால்கள் செயலிழந்த நிலையில் மறைந்த போப்பாண்டவர் இரண்டாம் ஜான் பாலின் படத்தை தனது மார்பின் மேலே வைத்துக் கொண்டு இயேசுவிடம் ஜெபித்துக் கொண்டிருப்பது அவரது வழக்கம்.

அப்பொழுதுதான் நடந்தது அந்த அதிசயம்! திடீரென்று ஒரு கனவு! "ப்ளோரிபத், என்ன செய்கிறாய் இங்கு...? எழுந்து சென்று சமையலறையிலிருக்கும் உனது கணவரை சென்று பார்" என்ற குரல் கேட்டது. அப்பொழுதுதான் நடந்தது அந்த அதிசயம்!.

அவர் தன்னுடன் வைத்திருந்த போப்பாண்டவர்







## 80 லட்சம் பேர் 10 நாளில் தரிசனம் செய்த அதிசயம்...!



துணியின் ஒரு பகுதியை கத்தரித்து நீக்கினார். தண்ணீரை ஆசிர்வதித்து அவன் மேல் தெளித்தார். தனது கைகளால் சிலுவை அடையாள மிட்டவாறே சிறுவனைத் தூக்கி நிறுத்தினார் பிரான்சிஸ் சேவியர். இயேசுவின் நாமத்தால் அவர் ஜெபம் செய்ததால் சிறுவன் உயிர்த்தெழுந்தான்.

புனிதரின் பயணம் தமிழகம் மட்டுமல்ல, அண்டை நாடான ஜப்பான் தேசம் உட்பட இன்னும் பல ஆசிய நாடுகளுக்கும் தொடர்ந்தது.

அவ்வாறான பயணத்தில் ஒன்றுதான் இந்திய எல்லையான கன்னியாகுமரிக்கு வந்த சம்பவமாகும். வைராக்கியமும், கடினமனதுங் கொண்ட மக்கள்தான் அவரை எதிர்கொண்டனர். இந்தமக்களை எவ்வாறு மாற்றுவது என்று யோசித்தார். அவரிட மிருந்த ஒரே ஆயுதம் ஜெபம். அதனைக் கையிலெடுத்தார். நாள் தோறும் இயேசுவிடம் முறையிட்டார்.

அப்போதுதான் இரண்டு நாளுக்கு முன்னர் அங்கே பிரபலமான ஒருவர் இறந்த செய்தி அவரிடம் கூறப்பட்டது. பார்வையிட சென்றார் புனித பிரான்சிஸ் சேவியர்.

துர்வாடை தாங்க இயலவில்லை. கல்லறையைத் தோண்டி பிணத்தை வெளியே எடுத்தனர். பிணத்தின் முன்பு மண்டியிட்டார். வானோக்கிகண்களை உயர்த்தி 'இயேசுவே' என்றார். இறந்தவர் உயிர் பெற்றார்.

இவ்வாறுதான் அவர் சென்ற இடமெல்லாம் அற்புதங்கள் செய்து அதன்மூலம் ஏராளமானபேர் மனந்திரும்பினர்.

ஒருமுறை அயல்நாடு ஒன்றில் மலாக்கா என்ற இடத்தில் அவரால் ஞானஸ்தானம் கொடுக்கப்பட்ட ஒரு பெண் இறந்துவிட்டார். இறந்து பலநாள் ஆகி



**கோவாவில் உள்ள புனித பிரான்சிஸ் சேவியரின் அழுகாத உடல்**

விட்டிருந்தது.

பைபிளில் இயேசு மார்த்தா, மரியா ஆகியோரின் சகோதரன் மூன்று நாள் கல்லறையில் இருந்தவனை உயிரோடெழுப்பிய இறை இயேசு உதிர்த்த அந்த வார்த்தையை நினைவு கூர்ந்தார்.

"உயிர்த்தெழச் செய்பவனும், வாழ்வு தருபவனும் நானே! என்னிடம் நம்பிக்கை கொள்ளுபவன் இறப்பினும் வாழ்வான்." (யோவான் 11:25)

அடுத்தகணமே சிறுமி உயிர்பெற்று எழுந்து நின்றாள்.

புனித பிரான்சிஸ் இறுதியாக மறைபரப்புப் பணிக்காகச் சென்றது ஜப்பான் தேசம். அங்குள்ள ஒருவரது ஒரேமகள் இறந்து விட்டாள். அவளது அப்பா, புனித பிரான்சிஸ் சேவியர் இருந்த இடத்திற்கு ஓடோடி வந்தார். இறந்த சேதியைச் சொன்னார். ஊக்கத்தோடு ஜெபித்தார் சேவியர். பெண்ணின் தந்தையும் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார். வருகின்ற வழியில், எதிர்கொண்டு வந்த வேலைக்காரன் கூறினான் "உங்கள் மகளுக்கு உயிர் வந்துவிட்டது."

இத்தனை அற்புதங்களை இயேசுவின் விலையேறப் பெற்ற நாமத்தால் செய்த இந்த பிரான்சிஸ் சேவியர் வேறு யாருமல்ல. நாம் "புனித சவேரியார்" என்று அழைக்கிறோமே அவரேதான்.

மத்தேயு 10:8 ல் இதுபற்றி காணப்படுவது

இயேசு இந்த பன்னிரு சீடர்களையும் அனுப்பியபோது கூறியது "நலம் குன்றியோரை குணமாக்குங்கள், இறந்தோரை உயிர்பெற்றெழச் செய்யுங்கள் தொழ நோயாளரை நலமாக்குங்கள், பேய்களை ஓட்டுங்கள் கொடையாகப் பெற்றீர்கள் கொடையாகவே வழங்குங்கள்"

ஜான்பாலின் படத்திலிருந்த கைகள் நீண்டு அவரைப் பிடித்துத் தூக்கியது.

துள்ளி எழுந்தாள் ப்ளோரிபாத். மருத்துவத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றுதான் நடந்துள்ளது என்று வியந்தார் வர்காஸ் ரோமன் என்ற அவரது குடும்ப மருத்துவர்!

புனிதராக திருநிலைப் படுத்தப்பட்ட புனித இரண்டாம் ஜான்பால், செய்த இன்னொரு அற்புதம், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சகோதரி மேரி சைமன் என்ற கன்னியாஸ்திரிக்கு நடைபெற்ற அனுபவமாகும். பார்க்கின்ஸன் நோயால் பாதிக்கப்பட்டு, படுத்த படுக்கையாக கிடந்த அவர் ஜெபத்தில் போப் ஜான்பாலின் உதவியைக் கேட்டபடி ஜெபத்திலேயே பொழுதைக் கழித்தார். அற்புத விதமாக அவரும் சுகம் பெற்றார்.

இவையெல்லாம் அவர் இறந்து அடக்கம் செய்யப்பட்ட பின்னர் நடந்த அற்புதங்கள்.

ஆனால், அவர் 2005ஆம் வருடம் இறந்த பின்னர் அவர் உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்த மக்களின் எண்ணிக்கைதான், உலகிலேயே அதிக மக்களை ஈர்த்த சம்பவமாகும்.

வெறும் ஆயிரம் பேரையே ஜனத்தொகையாகக் கொண்ட இந்த ரோமிலுள்ள வத்திக்கான் நகரத்தில் சுமார் 10 தினங்களில் குவிந்த மக்களின் எண்ணிக்கை 80 லட்சம். அவரது உடலைப் பார்க்க 24 மணிநேரம் இரவும் பகலுமாகக் காத்துக்கிடந்தே அவரது உடலைப் பார்க்க முடிந்தது. நாற்பது லட்சம் பேருக்கே, அருகில் வந்து பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. கூட்டத்தின் மிகுதி காரணமாக மீதமுள்ள 40 லட்சம் பேரால் அருகில் சென்று பார்க்க இயலவில்லை.

80 லட்சம் பேரை ஈர்த்த போப்பாண்டவர் ஜான்பால் அதிசயமானவர்தானே

■

# 'புருடா'மன்னர்களா ... வாய்ச்சொல் வீரர்களா ...?



சமீப காலங்களில், எதிர் பார்ப்புகளோடு கூடிய அளவில் நடந்தேறிய தேர்தல் எது என்றால், பாராளுமன்றத்துக்காக நடைபெற்ற தேர்தல்தான்.

தமிழகமானாலும் சரி, மத்திய அரசிலானாலும் சரி இரண்டிலும் மக்கள் தந்த முடிவுகள் ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

கூட்டணி சேர்க்கைகள் மூலம், அரசியல்வாதிகளும் தங்களை தோலுரித்து காட்டி விட்டனர்.

தமிழக மக்களும் தாம் விரும்புபவர் யார் என்பதை நிறுபித்தும் காட்டிவிட்டனர்.

## இனி தோலுரிக்கப்பட வேண்டியவர்கள் மூடப்பழக்கங்களை விதைத்துக் கொண்டிருப்பவர்தாம்!.

வடவை மாதா குரலொலி தேர்தல் தேதி அறிவிப்பதற்கு முன்னரே, ஒரு சாராரின் சுயரூபத்தையும், நம்பகத்தன்மையும் நிறுபித்துக்காட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்தது.

யார் அந்த ஒரு சாரார்...?

தனது மூடக்கருத்துக்களை மக்களிடையே பரப்பி, அதனை மக்கள் நம்ப வைத்து, ஆயிரக்கணக்கில் பணம் சம்பாதிப்பதோடு மட்டுமல்லாது மக்களை அறிவுபூர்வமான ஆக்கச் செயல்களைச் செய்ய தடைபோடும் ஜோசியக்காரர்கள்தான் அவர்கள்.!

## ஜோதிடர்களும் சளைத்தவர் களல்லவே.......!

எண் கணிதம், வான்மண்டல ஜோதிடம், ஆருடம், சோளி உருட்டு, ஓலைச் சுவடி, விதிப்படியான ஜாதகம், நாடி ஜோதிடம், கட்டம் கட்டி ஜாதகம் விஞ்ஞான ஜோதிடம் என்று விதவிதமான வழிகளில் –

## ஆளாளுக்கு கிளம்பினார்கள், ஜோதிட வியாபாரிகள்....!

கடந்த பெப்ரவரி மாதம் முதலே நாமும் தயாரானோம். பத்திரிக்கையிலும், தொலைக்காட்சியிலும், சமூக வலைத் தளங்களிலும் இவர்கள் தோன்றி அப்படியொரு தைரியத்துடன்,





ஆணித்தரமான தேர்தல் தொடர்பான முன்னறிவிப்புகளை எடுத்து விட ஆரம்பித்தார்கள்.

நாமும், அப்படி யார் யார் என்ன சொல்கிறார்கள் என்பதை, கழுகுக் கண் கொண்டு நாலாபுறமும் சுழன்று பார்த்து குறிப்பெடுத்துக் கொண்டோம்.

நாம் நினைத்தப்படியேதான் நடந்தது!

பெரும்பாலானவர்கள், கிட்டத்தட்ட 80 சதவீதம் பேர், நாட்டு நடப்பை அலசிப்பார்த்து அதற்கேற்றாற் போன்று தங்களது சொந்த கருத்துக்களைத்தான் ஆருடமாகக் கணித்து அறிவித்திருந்தார்களென்பதும், மொத்தத்தில் இவர்களனைவருமே புருடா வாயாலே வடை சுடுபவர்கள் என்பதும் நிறுபணமானது.

**'மோடி ஜெயிப்பாரா'** என்ற கேள்விக்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை நீங்களே பார்த்து யார் யார் புருடா மன்னர்கள் பட்டத்துக்கு தகுந்தவர்கள் என்று கணித்துக்கொள்ளுங்கள்.



**சித்தை தாய்:** பெங்களூரைச் சேர்ந்த ஓலைச்சுவடி மூலம், வருங்காலத்தைச் சொல்லும் பெண் சாமியார்.!

சன் நியூஸ் சேனலில் 5 நிமிட பேட்டி என்று அவ்வப்போது, பலவிதமான பேட்டிகளை ஒளிபரப்புகிறார்கள். அவ்வாறு ஒளிபரப்பப்பட்ட சித்தைதாயின் பேட்டிதான் இங்கு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பேட்டியில் இவர் இரண்டு லட்சம் மந்திரங்களை உச்சரிக்கும் வல்லமை பெற்றவர் என்றும் ஐயாயிரம் 'உத்ராசனம்' செய்யும் ஆற்றலுள்ளவர் என்றும் தன்னை அறிமுகப்படுத்துகிறார்.

இவரது குருவான ஆத்மசித்தர் அடிக்கடி கனவில் தோன்றி இவருக்கு பலவற்றை கூறுவதாக கூறுகிறார் இவர். 148 நாள் விரதம் இருந்து அதன் மூலம் சக்தி பெற்று ஓலைச்சுவடிகளை எழுதி வைத்திருப்பதாகக் கூறுகின்றார்.

'மோடி ஜெயிப்பாரா' என்று கேட்ட கேள்விக்கு இவர் "மோடி தோல்வியைத்தான் தழுவுவார். ஏனென்றால் 75 சதவீதம் பேர் இவருக்கு எதிரிகளாக உள்ளனர்..." என்றாறே பார்க்கலாம்! ( இந்த பதிவின் தேதி மே மாதம் 14, 2019)



**ஆதித்ய குருஜி:** 'மோடி ஜெயிப்பாரா' என்ற கேள்விக்கு இவர் கூறிய பதில்: "பெரும்பாலான தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள், மோடி பெரும்பான்மையுடன் ஜெயித்து பிரதமராவார் என்றுதான் கூறுகின்றன. ஆனால், ஜோதிடக்கணிப்பின்படி மோடி பிரதமராக வாய்ப்பேயில்லை".

"மோடியுமல்ல, ராகுலுமல்ல', மூன்றாவது நபர் ஒருவர்தான் பிரதமராவார்"(இந்த பதிவின் தேதி 22 மே,2019)



**நாடிபாபு:** இவர் ஒரு நாடி ஜோதிடர், ரோஜா டிவி என்ற அமைப்பின்மூலம் இவர் அடிக்கடி தோன்றி தனது ஆருடத்தை பதிவிடுகிறார். இவர் பதிவிடும் போது எழுப்பும் குரலொலி விசித்திரமமக இருக்கும்.

‘ ‘ ஹிங் . . . ஹிங் . . ஞய்...ஞய்...மேடா... மேடா... என்று கத்தியவாறு இடையிடையே தனது ஆருடத்தையும் கூறுகிறார். இந்த டாக்டர் பாபு. மோடி ஜெயிப்பாரா என்று கேட்ட கேள்விக்கு ‘முழு பலத்துடன் மோடி ஜெயிக்க வாய்ப்பில்லை. ஆனால், யாரோடாவது கூட்டுச் சேர்ந்தால்தான் இவர் பிரதமராக வாய்ப்பு” என்றார் இவர்.

**ராதன் பண்டிட்:**



முப்பத்தேழு வருடங்கள் விதிப்படியான ஜோதிடம் சொல்லுவதாகவும் 28 வருடங்களாக அரசியல் சம்பந்தப்பட்டவற்றை முன்கூட்டியே கணித்துச் சொல்லியிருப்பதாகவும் தன்னைப்பற்றி கூறுகிற இவர், மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, 1996 தேர்தலில் தோற்பார் என்றும், அவரது தொகுதியில் கூட வெற்றி பெற மாட்டார் என்றும், சிறைக்குச் செல்வார் என்றும் கூறியது அவ்வாறே நடந்தது என்கின்றார்.

ஜெயலலிதாவின் பெயரைக்கூட சாஸ்திரப்படி மாற்றிக் கொடுத்தவர்தாம் இவர். ஆக, மோடி ஜெயிப்பாரா என்ற கேள்விக்கு இவர் கூறிய பதில்!

“கடந்த தேர்தலில் மோடிக்கு சந்திர திசையில், ராகு மேலோங்கி இருந்ததால் 270 க்கு மேல் சீட்கள் கிடைத்தன. இப்பொழுது அதே சந்திர திசையில் கேது புத்தி இருப்பதால் 100 முதல் 122 அல்லது 150 க்கு மேல் சீட் பெற முடியாது” என்றார், ராதன் பண்டிட்(பதிவிட்ட தேதி 21 மே, 2019).

**கிரீன்ஸ்டோன் லோபோ:**

இவர் விஞ்ஞான முறையில் கணித்து மீண்டும் நரேந்திர மோடி தான் வருவார் என்று கூறுகிறார்.

**தமிழ் நியூஸ்– ரெட் பிக்ஸ்:**

இந்த ஜோதிடக் கணிப்பைக் கூறுபவர் ஒரு வழக்கறிஞர். மூன்று நாள் நீர் கூட அருந்தாது உணவின்றி தவமிருந்து கீழ்க்கண்ட முடிவைத் தெரிவிக்கிறார்.

“இனிமேல் பிஜேபி, இந்தியாவில் இருப்பதே சந்தேகம்” என்று முடிக்கிறார் இவர். இந்த பதிவின் தேதி பெப்ரவரி 20ம் தேதி.

**பா. புதியநாயகம்:**

“ராகுலுக்கு விருச்சிகத்தில் கேது இருக்க மிதுன லக்னத்தில் பிறந்தவர். மோடிக்கும் அதே விருச்சிகத்தில் அனுஷ நட்சத்திரம். இருவரும் 2ம் இடத்தில் குருவும் ஏழறை சனியின் கடைசிக் கட்டத்திலும் இருக்கிறார்கள்– மொத்தத்தில் ராகுலுக்கு வாய்ப்பு குறைவு” என்கிறார். இந்த ஸ்ரீவித்யா உபாசகர்” இந்த செய்தியின் பதிவு வெளியான தேதி ஏப்ரல் 15ம் தேதி.

**புதுவசந்தம் டிவி:**

எண் கணித முறையில் கணித்திருக்கிறது புது வசந்தம் டிவியின் ஜோதிடர்இவர் கூறுவது, மத்தியில் ஆட்சி மாற்றம் நிச்சயம், வராதவர்கள் வருகிறார்கள் திமுக கூட்டணியில் காங்கிரஸ் இருப்பதால் ராகுல்காந்திதான் அடுத்த பிரதமர்”.

**பாலாஜி ஹாசன்:**



அகில உலக ஜோதிடர் மாநாட்டில் பங்கேற்று பலவிதமான பதக்கங்களைப் பெற்றவர். எப்போழுதும் செய்திகளில் அடிபடுபவர். இவர் தமிழகம் பாண்டிச் சேரியிலுள்ள 40 இடங்களுக்கும் மிகவும் விரிவாக அலசி முடிவை வெளியிட்டிருந்தார்.

நான்கு பகுதிகளாக இவரது முடிவுகள் வெளியிடப்பட்டிருந்தாலும், மூன்று பகுதிகளே ‘நமது’ கைவசம் உள்ள படியால், முதல் மூன்று பதிவுகளின்படி கணக்கிட்டு சராசரியாக 25 சதவீத இடங்களை அதிமுக கைப்பற்றும் என்றும் 75 முதல் 80 சதவீதம் திமுக அணி கைப்பற்றும் என்றும் கூறுவதாகவே உள்ளது.

**விஸ்வஸ்ரீ மகாராஜ்:**

மே மாதம் 2ம் தேதியில் இவர் கீழ்க்கண்ட ஆருடத்தை வெளியிடுகிறார். “தமிழ் நாட்டில் திமுகவுக்கு மிகுந்த பின்னடைவு. காரணம் திமுக ஆட்சியிலிருக்கும் போது தொடர் மின்வெட்டு ஏற்பட்டது. கோவாவில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. மொத்தத்தில், மக்கள் திமுக மேல் கோபத்திலுள்ளார்கள்”

‘‘பொன் ராதாகிருஷ்ணன் ஜெயிப்பார். தூத்துக்குடியில் குப்பாக்கி சூடு நடைபெற்று 12 பேர் உயிரிழந்தாலும், ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டு விட்டதால் தொழில் வளம் குறுகிவிட்டது. ஆகவே அதிமுகதான் பெருவாரியான இடங்களைக் கைப்பற்றும்”.



**வேங்கடசர்மா:**

**வேங்கடசர்மா:**

இவர் கேரள நம்பூதிரி ஏற்கனவே சன் நியூஸ் தொலைக்காட்சியில் நேருக்கு நேர் நிகழ்ச்சி மூலம் பிரபலமானவர். ஜெயலலிதா ஆவியுடன் அடிக்கடி பேசுவதாகவும், அந்த ஆவி 31 பேரை பழி வாங்குவதற்கு அலைவதாகவும் கூறியுள்ளார்.

இப்போது பாராளுமன்றம் பற்றிய கேள்விக்கு அதே சன் நியூஸ் ஐந்து நிமிட பேட்டியில் அவர் கூறியது, “அதிமுக– பிஜேபி கூட்டணி 16 இடங்கள் வரை கைப்பற்றும்‘ மீதி திமுக கூட்டணி கைவசம் சென்று விடும் என்கின்றார், சோழியை உருட்டியவாறே!. ஆக, மேற்கண்ட 11 பேரில் 8 பேர் மோடிக்கு எதிராகவும் 3 பேர் மட்டுமே அவருக்கு ஆதரவாகவும் கருத்துக்களை பதிவிட்டிருக்கிறார்கள்.

நமது கேள்வி!

வாசகர்களாகிய நாம் தினமும் தொலைக்காட்சி, இணையதளம் மற்றும் பத்திரிக்கைச் செய்திகள் ஆகியவற்றைப் படிப்பதன் மூலம் ஆளுக்கொரு விதமாக அரசியல் கருத்துக்களைக் கூறுவதுண்டு.

**ஆனால், முற்றிலும் தெரிந்தவர் களாக வெளிக்காட்டும் ஜோதிட நபர்கள், இந்த அளவுக்கு, படுமோசமாக கணித்துச் சொல்லுகிறார்களே என்று என்னும்போது, ஜோதிடத்தின் நம்பகத்தன்மையை சந்தேகம் கொள்ளுவதில் என்ன தவறிருக்கிறது? சிந்திப்போம்..**

–மு. சேவியர் சந்திரகுமார்







# ‘கிறிஸ்தவம் வளர்ந்தது பணபலத்தாலா, போதனைகளாலா, தியாகத்தாலா...?

**சமூகவலைத்தளங்களான ‘யூட்யூப்’ போன்றவற்றில் சமீப காலமாக கிருஸ்தவ மதத்தை மிகவும் கேவலமாகவும், இயேசுவையும் புனித தோமையார் போன்ற புனிதர்களையும் அவன் இவன் என்றும், கிறிஸ்தவர்களை ‘பாவாடை’ என்றும் விதவிதமாக, கிண்டல் செய்யும் பதிவுகள் வந்த வண்ணமாக இருக்கிறது. இந்த பதிவுகளை வரவேற்கும் விதமாக நூற்றுக்கணக்கான ஆதரவும் கருத்துக்களையும் திட்டமிட்டு பரப்புகிறதையும் காண முடிகிறது. மட்டுமல்லாது, பணத்துக்காக மட்டுமே மதம் மாறுகிறார்கள் என்ற பிரச்சாரமும் அவற்றில் மேலோங்கியுள்ளது. இதில் உண்மையுள்ளதா என்பதை மக்கள் உணரும் வகையில், அனுபவப் பகிர்வு தேவை என்ற நோக்கத்தில்தான் இந்த முயற்சி.**



‘கிறிஸ்தவம் வளர்ந்தது ஏமாற்றுவழிகளாலா, பணபலத்தாலா, போதனைகளாலா, தியாகச் செயல்களாலா, உங்களது கருத்து என்ன என்று வடவைமாதா குரலொலி ஆசிரியர் சேவியர் சந்திரகுமாரிடம் கேட்கப் பட்டது.

சிறிது யோசித்தவர்...

‘இதற்குப்போய் யாரிடம் கேட்பது. எனது வாழ்வில் நானே கண்கூடாகக் கண்டதையும், கேட்டதையும் வைத்தே தெரிந்து கொள்ளலாமே’ என்றார்.

என்ன...?

‘எனது வாழ்வில் சம்பந்தப்பட்ட முக்கிய ஊர்கள் நான்கு. இந்த நான்கு இடங்களிலுமுள்ள அன்றைய மற்றும் இன்றைய சூழலை ஆராய்ந்தாலேயே போதும். அதன்மூலம் கிறிஸ்தவம் வளர்ந்திருக்கிறதா, தாழ்ந்திருக்கிறதா அதன் காரணந்தானென்ன என்பதையும் தெரிந்து கொள்ளலாமல்லவா’

எந்தெந்த ஊர்கள்...,

‘நான் பிறந்து வளர்ந்தது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வள்ளியூரையடுத்த வடக்கன்குளம். நான் வேலையினிமித்தம் முதலில் வந்து தங்கியிருந்தது சென்னயையிலுள்ள சாந்தோம் பகுதி. அங்கிருந்து ‘சுலபமுறையில் கல்வி நூல் வரிசை’ என்ற தொகுப்பினை வெளியிட, ஆராய்ச்சிப் பணிக்காக சென்ற ஊர் சென்னையையடுத்த திருப்போரூர் ஒன்றியத்திலுள்ள சோனலூர் என்ற குக்கிராமம்.

அதன்பின் நெடுங்காலமாக, நிரந்தரமாக வாழுகின்ற இடம் சென்னையையடுத்த 25 கி.மீ. தூரத்திலுள்ள ஓ எம் ஆர் சாலையில் அமைந்துள்ள கேளம்பாக்கம்’.

‘ஆஹா... இந்த நான்கு ஊர்களிலும் அன்றும் இன்றும் அலசப் போகிறீர்களா...?”

“அலச வேண்டுமென்று ஆரம்பித்தால் அதற்கென்று தனிப்புத்தகம் தான் போட வேண்டும்.”

‘சுருக்கமாகச் சொல்லுங்கள் சாமி’

‘அதே.. நான் சொல்லப் போவதெல்லாம் பொதுவாகவே சமீப காலங்களில் கிறிஸ்தவர்களைப் பற்றி இழித்தும் பழித்தும் சமூக வலைத்தலங்களிலும், சில பத்திரிகைகளிலும் வேண்டுமென்றே அவதூறுகளைப் பரப்பி கிறிஸ்தவத்தையே கொச்சைப்படுத்துகிறார்களே அதனால் தான் இந்த ஊர்களில் நடைபெற்ற நிகழ்வுகளையே கோடிட்டுக் காட்டலாமே என்றுதான்’

‘என்னிமித்தம் உங்களை அவமதிப்பார்கள் சங்கங்களிடம் ஒப்படைப்பார்கள். தொழுகைக் கூடங்களில் உங்களை சாட்டையால் அடிப்பார்கள். என் பொருட்டு உங்களை ஆளுநர்களிடமும், அரசர்களிடமும் இழுத்துச் செல்வார்கள்’ என்று பைபினில் கூறப்பட்டுள்ளதே..! அதையும் மீறி, ‘உலகம் முழுவதும், எனது சுவிசேஷ நற்செய்தி சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்‘ என்றும் கூறப்பட்டுள்ளதே...!’

‘ ஆமாம்... அதற்காக, அவதூறு பரப்புபவர்களுக்கும், உண்மை நிலையை எடுத்துக்கூறி அவர்களும் சிந்திப்பதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமே என்பதற்காகத் தான்..!

‘ அந்த மொத்த ஊர்களின் சரித்திரத்தையும் சொல்லப்போகிறீர்களா’

‘ அதுதானில்லை, எவ்வாறு இறைவனது கரம் அந்தந்த ஊர்களிலிருந்தது என்று அந்த குறிப்பிட்ட கோணத்தில் மட்டுமே, சில நிகழ்வுகளையும், மாற்றங்களையும்



கூறப்போகிறேன்'

'ஓகே.. ஓகே... நல்லது... தொடருங்கள்'

குறுக்கே வந்து கேள்வி கேட்காமல், ஒழுங்காகக் கேட்டால் மட்டும் போதும்.'என்று அவர் கூறி அவரே தொடர்கிறார். கேளுங்கள்.




ஒரேயொரு ஊரில் ஓரேயொரு குடும்பம் என்று பொட்டல் காடாக இருந்த வடக்கன் குளத்தில் முதன் முதலாகக் குடியேறியவர்தாம் சாந்தாயி அம்மையாரும் அவரது கணவர் ஞானமுத்து நாடாரும்.

அங்கேயே ஒரு குடிசையமைத்து தங்கியிருந்தவர்களை, கொச்சியிலிருந்து குதிரையில் வந்த ஒரு குருவானவர் பார்க்க, அவரும் இவர்களை ஆசிர்வதித்து, சிறு ஜெபக்கூடம் அமைக்கப்பட்டது.

ஆரம்பமே ஆசிர்வாதத்தினால் நிரம்பியதாலோ என்னவோ, சாந்தாயி அம்மையார் அருகிலுள்ள ஊர்களுக்குச் செல்லும் போதெல்லாம் அவர் தொட்டதெல்லாம் துலங்கியது.

மெல்ல மெல்ல, ஒன்று ஒன்றாக அந்தந்த ஊர்களிலிருந்து விருப்பப்பட்டவர்களை, தான் தங்கியிருந்த இடத்துக்கு வரவழைத்து கிறிஸ்துவின் அன்பை எடுத்துக்கூற, அவர்களும் மனமாறி மெய்மறையைத் தழுவ, அப்படித்தான் ஆரம்பித்தது வடக்கன்குளம் சரித்திரம்.



அப்போதுதான் வந்தது வினை! அருகிலுள்ள பெருங்குடி என்ற கிராம இந்துக்களும், அங்கிருந்து வடக்கன்குளத்தில் குடியேற ஆரம்பித்த அதே சமூக மக்களும், கிறிஸ்தவர்களைக் கொடுமைப் படுத்த, விசுவாசத்துக்கு வந்தது முதல் சோதனை!

வடக்கன்குளம் புதிய பங்காக அங்கீகரிக்கப்பட்டு குருவானவர்கள் நியமிக்கப்பட்டனர். டீசா சாமியார் பங்கு பொறுப்பேற்ற காலத்தில், அவரால் ஒரு பெரிய மனிதர் கிறிஸ்தவ மறையைத் தழுவ, கூடவே வந்தது அடுத்த சோதனை! இந்து பெருமக்கள் சாமியாரை மரத்தில் கட்டி சாட்டையால் அடித்தனர்.

பிரண்டோலனி என்ற சாமியார் காலத்தில் குழந்தைகள் தவறுதலாக, நெருப்பு வைக்க, குடிசையிலான கோயில் எரிந்து சாம்பலானது. எல்லாம் நன்மைக்கே என்பது போன்று, சிறிய கோயிலைக் கட்டினார் சாமியார்.

1712 ஆம் வருடம்! கன்னியாகுமரி மாவட்டத்தைத் சேர்ந்த திருவிதாங்கூர் மன்னரின் சமஸ்தானத்துக்குட்பட்ட பள்ளியாடியில் பிறந்தவர்தாம் நீலகண்ட பிள்ளை! இந்து மதத்தில் வைராக்கியம் கொண்டவராக இருந்ததால் அவரும் மன்னருக்குப் பிடித்துப் போக, சமஸ்தானத்திலேயே அமைச்சரானார்.


சகல ஆச்சாரங்களோடு அரசரோடு உலவிய நீலகண்டபிள்ளை, கிறிஸ்தவத்துக்கு மாறவே, பற்றிப் பிடித்தது பிரச்சினை தீ! ஊர் பேசும் பேச்சாக மாற வடக்கன் குளத்துக்கு அருகிலுள்ள ஆரல்வாய் மொழியில் மன்னரின் சேனைகளால் ஈட்டியால் குத்தப்பட்டு, வேத சாட்சியாக மரித்தார் நீலகண்டபிள்ளை என்ற தேவசகாயம் பிள்ளை. இவருக்கு 'ஆசிர்வதிக்கப்பட்டவர் என்ற பட்டமானது சமீபத்தில் போப்பாண்டவரால் அளிக்கப்படடு, இவரது புகழ் இன்றும் நிலைத்திருக்கிறது.

இந்த தேவசகாயம் பிள்ளை ஞானஸ்நானம் பெற்ற இடம்தான் வடக்கன்குளம். இவரது மனைவியான ஞானப்பூ அம்மாளின் கல்லறையும் வடக்கன்குளத்திலே உள்ளது. அவர் அணிந்திருந்த தலைப் பாகை ஒன்று இன்றும் வடக்கன்குளத்திலுள்ள திருக்குடும்ப தேவாலயத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஆக, இவ்வாறான சம்பவங்களால் வடக்கன்குளத்தில் பக்திமணம் வீச ஆரம்பித்தது.

1803 ஆம் வருடம் வடக்கன்குளம் ஆலயத்தில் நடைபெற்ற அற்புதம், பிரமிக்கத்தக்கது. மூடப்பட்டிருந்த





தேவசகாயம் பிள்ளை ஞானஸ்நானம் பெற்ற வடவை ஆலயம்



நிலையில் அமைக்கப்பட்டிருந்த மாதாவின் சுருபம், கைகள் விரிந்த நிலையில், கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் சொரிய மேகக்கூட்டங்கள் கோயிலைச்சூழ, மாதாவின் கண்ணீர் வடிந்த காட்சியைக் கண்ட முதல் நபர் சவரிமுத்துப்பிள்ளை!

மக்களின் பாவத்துக்காகவும், வடக்கன்குளத்தில் நடக்கப்போகும் வேதகலாபனையை நினைத்து, அன்றே வருந்தி கண்ணீர் விட்ட மாதாவின் சுருபம், இன்றும் மூடிய நிலையில் காணப்பட்டாலும், சிறிது திறந்த நிலையிலேயே உள்ளது.

மாதா முன்னறிவித்தபடி, மிகப்பெரிய கலவரம் 1824 ஆம் வருடத்தில் வடக்கன்குளத்தில் நடந்தது. 1875 ஆம் வருடம் மீண்டும் கலவரம்! நாடார் சமூகத்தினருக்கும், வெள்ளாள சமூகத்தினருக்கும் பிரச்சனை ஏற்பட, கேனோஸ் சுவாமிகள் இருதரப்பாருக்கு சமரசம் ஏற்படுத்தினார்.

சமாதானத்தை விரும்பாத வர்கள் கலங்கிய குட்டையில் மீன்களாகத் தவிக்க, வேற்று மதத்தவர்கள் இவர்களை வலை போட்டுப் பிடித்தனர்.


ஆளுக்கொரு பிறமதக் கோயில்களைக் கட்டிக் கொண்டு, தங்களது தேவதையை தேரில் இழுத்துக் கொண்டு வந்து, மாதா கோவில் வாசலில் தேங்காய் உடைத்து மாதாவின் மனதை இரத்த ஆறாக மாற்றிய சம்பவங்கள் வாடிக்கையாகவே, இதனை நினைத்துத்தான் அன்று மாதா அழுதாரோ என்று மக்களுக்கு எண்ணத் தோன்றியது.

முன்னதாக, இப்பொழுது பொலிவோடு காணப்படும் ரோமாபுரியின் கலை நுணுக்கத்தோடு 1872ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட கோயில் 1972ம் வருடம் மரியஞானம் சுவாமிகள் காலத்தில் சீரமைக்கப்பட்டு நூற்றாண்டு விழா பிரமமாண்டாகக் கொண்டாடப்பட்டது. பிரிந்தவர்கள் ஒன்று சேர, மரியஞானம் அடிகளார் வேண்டுகோள் விடுக்கவே, பிரிந்தவர்களில் பாதிக்கு மேற்பட்டோர், மீண்டும் தாய்க்குடும்பத்தில் சேர்ந்தனர். மீதமுள்ளவர்களின் மனதையும் மாதா மனம்மாற்றி, அவர்களும் இன்று சமூக நல்லிணக்கத்தோடு வாழந்து வருகின்றனர். மாதாவின் சொர்க்க பூமியாக மாறி, திருயாத்திரைத் தலமாக திகழ்கிறது 'சின்ன ரோமாபுரி' என்று அழைக்கப்படும் வடக்கன்குளம்.

'வடவைமாதா' என்று அழைக்கப்படும் வடவை பரலோக மாதா திருவிழா ஆகஸ்டு ஆறாம் தேதி ஆரம்பித்து 15ம் தேதி வரை மக்கள் பங்கேற்புடன் பங்குத்தந்தை பேரருட் திரு ஜான் பிரிட்டோ நிர்வாகத்தில் சிறப்பாக நடைபெறுகிறது.

ஆகஸ்டு 14ம் தேதி மாதாவின் விண்ணேற்பு பெருவிழா சீரும் சிறப்புடன் நடைபெற, கேரளா போன்ற அண்டை மாநில மக்களும் பெருவாரியாக வந்து சிறப்பிக்க, இயேசுவின் புகழ் பரவும் முக்கிய திருத்தலமாகக் இன்றும் திகழ்கிறது வடக்கன்குளம்.!!

**ஆக, தியாகத்திலும், பக்தியிலும் வளர்ந்த இடம்தான் இந்த வடக்கன்குளமே தவிர, அயல்நாட்டு பணத்தின் பிச்சையையோ வேறு எதையோ, ஒருபோதும் நாடாது தலைநிமிர்ந்து நிற்கும் ஊராகும் இது!**






உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இடம்தான் சென்னையின் ஒரு பகுதியான சாந்தோம்.

இங்குள்ள சாந்தோம் தேவாலயம் இன்றும் அயல் நாட்டு பக்தர்களின் வருகையால் நாள்தோறும் களைகட்டுவதற்குக் காரணம் இயேசுவின் சீடரான புனித தாமஸ் என்ற தோமையாரின் கல்லறை இந்த தேவாலயப் பகுதியில்தான் உள்ளது.

புனித தோமையார் மலை என்ற சென்னையின் இன்னொரு பகுதியிலுள்ள தோமையார் மலையில் அவர் பாதம்பதித்த இடங்களும், உயிரோடு கொல்லப்பட்ட இடங்களும் உள்ளன.

புனித தோமையார் பெயர் தாங்கி இன்றும் பல பிரிந்த சபையினரின் தேவாலயங்கள் உட்பட பல தேவாலயங்கள் ஒரே தெருவில் அமையப்பெற்று, ஞாயிறு தினங்களில் மக்கள் ஒருசேரக் குழுமும் இடமாக சாந்தோம் பகுதி இன்றும் திகழ்கிறது.'

இதன் பெருமையைச் சொல்ல ஏடு போதாது. பக்திமணம் கமழும் 'பசிலிக்கா' தரத்துடன், போப்பாண்டவர் இரண்டாம் ஜான் பால் நேரில் வந்து ஆசி பெற்றதாலோ என்னவோ, அவரும் ஒரு புனிதராக இன்று உயர்த்தப்பட்டுள்ளார். (இவர் பற்றிய சிறு குறிப்பு இதே இதழில் 11 ஆம் பக்கத்தில் காணப்படுகிறது)



இந்தக் கோயிலினருகில் சிறிது நேரம் வந்து நின்று பாத்தாலேயே தெரியும். இங்கு எங்கே மதமாற்றம் நிகழ்கிறது என்று!

**அகில உலகைப்படைத்த இறை இயேசுவின் ஆசிபெற்ற சீடரான தோமையாரால் புகழ்பெற்ற இந்த இடத்தில் மதமாற்றத்திற்கு இடமில்லை என்றாலும் கண்டிப்பாக இடமிருக்கிறது மனமாற்றத்திற்கு!.**




இங்கு நான் சென்று பணிபுரிந்தது 1975 ஆம் வருடவாக்கில். குக்கிராமம்; கிறிஸ்தவம் என்றால் அது என்ன என்று கேட்பார்கள் அவர்கள்!

நாங்கள் அங்கு சென்று பணிபுரிந்த நோக்கமே வேறு. சுலபமுறையில் கல்வி நூல் வரிசையில் பல்வேறு முறைசாராக் கல்வியின் தொடக்க நூல் எழுத வேண்டி, கற்பிக்கும் உபகரணங்களை, குழந்தைகள் மத்தியில் பழக்கத்தில் விட்டு, ஆராயும் நோக்கமே தவிர வேறொன்றுமல்ல.

அங்கே அமைக்கப்பட்டிருந்த பெரிய ஓலைக் கொட்டகையில் இரவுப்பாட சாலை, அந்த ஊரில் பயிற்சிபெற்ற இளைஞரால் நடத்தப் பட்டது.

அப்போது அந்தக் கொட்டகைக்கு எதிரே அமைக்கப் பட்டிருந்த பழமையான கோயிலுக்கு நாள்தோறும் அவ்வூர் மக்கள் சாமி கும்பிட வருவது வாடிக்கையாக நடந்து வருவதுதான்! செவ்வாய் வெள்ளிகளில் 'சாமியாட,' 'பக்தி மணம்' கமழும் ஊர்தான் சோனலூர்.

சுமார் இரண்டு வருடங்கள் இங்கு கல்விச்சேவை நடைபெற்றது. காலமாற்றத்தால் இங்கிருந்த பணிகள் முடிவுற்றது என்றாலும், முதல் அனுபவம் என்பதால் இவ்வூர் மக்களை மட்டும் மறக்கவே இயலாது.

இடையிடையே இவர்களுள் ஒரு சிலரை கேளம்பாக்கம் பகுதியில் பார்க்க நேரிட்டாலும், அப்படியொரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பம் நிகழவேயில்லை என்பதுதான் உண்மை. ஒருசில சமயங்களில் ஒருசில சுகாதார முகாம்கள் ஊர் எல்லையில் நடைபெற்றன என்றாலும் காலச்சூழ்நிலையால் முன்னர் இருந்த முழு ஈடுபாடு இந்த ஊரில் ஏனோ நமக்கு இல்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் அங் குள்ள மக்களும் கிறிஸ்தவர்களாக மாற ஆரம்பித்த செய்தி அரசல்புரலாகக் கேள்விப்பட அதுபற்றியும் முழுமையாகத் தெரியாத சூழ்நிலைதான் இருந்தது.

மிகச் சமீபத்தில் 25-07-2019 அன்று அதாவது சுமார் 35 வருடங்கழிந்து, சோனலூருக்குச் சென்றோம் ஒரு சில அலுவலக பணியாளர்களை அழைத்துக்கொண்டு! சென்னையையடுத்த திருப்போரூர் ஒன்றியத்திலுள்ள மாம்பாக்கம் ஊராட்சிக்கு அருகே அமைந்துள்ளதுதான் சோனலூர் கிராமம். பிரதான சாலையிலிருந்து சுமார் 2 கி.மி. தூரம் காட்டினூடே சென்றால்தான் இக்கிராமத்தை அடைய முடியும்.

உள்ளே பயணித்த நமக்கு அன்று பரிச்சயப்பட்ட வர்களைக் கண்டுபிடிக்கவே சிரமமாயிருந்தது. காரிலிருந்தபடியே ஊரில் அமைக்கப்பட்டிருந்த சாலைகளில் தென்படுவோரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்ற நோக்கத்திலேயே நாங்கள் சென்றோம்.

'ஜெயராமன் வீடு எங்கே' என்றபடி ஒரு சிறுவனைக் கேட்டோம் அவன் கைகாட்டிய இடத்துக்குச் சென்றால் அங்கிருந்தவர் 'அவரது வீடு இதுதான், அடுத்த தெருவில் சென்'று 'ஜஸ்டின்' வீடு எங்குள்ளது என்று கேளுங்கள் அங்குதான் அவர் பண்ணை உள்ளது' என்றார்.

'ஜஸ்டின்' என்றால் கிறிஸ்தவப் பெயராக இருக்கிறதே என்று யோசித்தபடி அங்கு சென்றால் அங்குள்ளவர்கள் இன்னொரு இடத்தைக் காண்பிக்க,



அங்கு சென்று சேர, அங்கு முக்கியமான பணியிலிருந்தார் ஜெயராமன்.

விசாரிப்புகள் முடிந்த நிலையில், 'ஜஸ்டின்' என்பவர் யார் என்று கேட்டோம். அது அவரது மருமகன். 'எப்படி' என்று கேட்க நானும் இப்பொழுது 'மத்தேயு ஜெயராமன்' என்றாரே பார்க்கலாம்!

அப்பொழுதுதான் வருகின்ற வழியிலிருந்த இரண்டு பெரிய சர்ச்சுகளைப் பார்த்த ஞாபகம் வந்தது.

“இங்கு இப்பொழுது நூறு குடும்பங்கள் உள்ளன. ஆனால் முக்கால் பகுதியினர் கிறிஸ்தவர்களாக மாறிவிட்டோம்” என்றார் அவர்.

ஆச்சரியமாக இருந்தது. அந்த ஜெயராமன் அன்றைக்கு எப்படியோ காணப்பட்டவர் இன்று முன்னாள் ஊராட்சித்தலைவர்! ஓலைக்குடிசைகளெல்லாம் மாறி இன்று எல்லாம் கட்டடங்கள். ஒவ்வொரு வீட்டிலும் தோட்டங்கள்.

நிலத்தின் விலை என்ன என்று கேட்டோம். ஒரு சதுர அடி ரூ.2500/– அதாவது கிரவுண்டு அறுபது லட்சம்! எங்கள் ஊர் பொன்மார் என்ற இடத்துக்கு அருகில் இருப்பதால் இந்த விலை. இதுதான் மிகவும் குறைந்த விலை என்றார்கள் அவர்கள்.

“கிறிஸ்தவர்களாக எப்படி மாறினீர்கள் காசு....பணம் என்று கூறிக்கொண்டு யாராவது வந்தார்களா?” என்று கேட்டதற்கு அவர் கூறிய பதில், 'எங்களுக்கு போதுமான நிலமுள்ளது, தோட்டம் மற்றும் மனை உள்ளது. எல்லாவற்றுக்கு மேலாக 'கர்த்தர்' இருக்கிறார்' நீங்கள் நினைப்பது போன்று பத்து காசு எங்களுக்கு கொடுக்க ஆளில்லை. அது எங்களுக்கு தேவையுமில்லை. எனது மகன், மருமகன், மகள், இந்த ஊரிலுள்ள இளைஞர்கள் அனைவருமே நன்றாகப் படித்து வேலையிலிருக்கின்றார்கள்' என்றாரே பார்க்கலாம்!

**நிச்சயமாக, கர்த்தர் பெரியவர்!**




வண்டலூரிலிருந்து 18 கி.மீ., மகாபலிபுரத்திலிருந்து 16 கி.மீ., செங்கல்பட்டிலிருந்து 35 கி.மீ., சென்னையிலிருந்து 23 கி.மீ., தூரத்தில் ஓஎம்ஆர் சாலையிலமைந்ததுதான் கேளம்பாக்கம்!

கோவளம் கடற்கரை அருகிலிருப்பதால் சுமார் 5 கி.மீ. நெடுகிலும் உப்பளங்கள்.!! உப்பு எடுப்பதுதான் முக்கிய தொழிலாக இருந்தது. ஆரம்ப காலங்களில் உப்பளம் வைத்திருப்பவர்களும், அதில் வேலை செய்தவர்களும் என்று இருபிரிவாக அமைந்திருந்தது வருமானம் வரும் வழிகள்.!

1980ம் வருடத்தில் இருந்த கோயிலுங்கூட சிறியதும் பெரியதுமாக இல்லையென்றாலும், மக்கள் வருகைக்கு போதுமானதாகத்தானிருந்தது.

அருகிலுள்ள கோவளத்தில்தான் பங்குத்தந்தை இருந்தார், ஞாயிறுகளில் பலிபூசை நடக்கும்.

2010ம் வருடம் புதிதாகக் கட்டப்பட்ட ஆலயம் மிகுந்த நேர்த்தியுடன் அமைந்திருந்தது. கேரளாவைச் சேர்ந்த கட்டடப் பொறியாளரின் தவறினால், கட்டடத்தின் உறுதித்தன்மை சந்தேகத்துக்கிடமானது.

புதிய கோயிலை நிர்மாணிக்கும் நிர்ப்பந்தம் தானாகவே ஏற்பட்டது. இன்றைய பங்குத்தந்தை, அப்பொழுதுதான் புதிதாகப் பொறுப்பேற்றிருந்தார். புதிய கோவில் கட்டுவது எப்படி என்று ஒன்றும் புரியாத குழப்பநிலைதான் அப்போதிருந்தது.

'புதிய கோவில் கட்டி பத்து வருடங்கள் கூட ஆகவில்லை. கோயிலுக்கு நன்கொடை கொடுங்கள் என்று எப்படி மக்களிடம் செல்லுவது என்ற நிலைதான்.

பங்குப்பேரவை, மற்றும் அன்பியப் பொறுப்பாளர்களிடம் ஆலோசனை நடத்தப்பட்டது. புதிய கோவிலின் மாதிரிகள் மூன்று விதமாக வரைபடமாக தயாரிக்கப்பட்டது.

நாளொன்று குறிக்கப்பட்டு திருப்பலி பூசை முடிந்தவுடன் பங்குமக்கள் அனைவரிடமும் ஓட்டெடுப்பு நடத்தப்பட்டது எந்த மாதிரியான கோயில் வேண்டுமென்று!

தகுதிக்கும் அப்பாற்பட்டதான, ரோமாபுரி கலை நுணுக்கத்துடனான மிகப்பிரமாண்டமான கோயில்தான் வேண்டும் என்றனர் மக்கள்!

இறைவன் இயேசு பெரிய வரல்லவா. அவரது ஆசியுடன் ஆகும் என்றனர் ஒருசேர!

ஓஎம்ஆர் பகுதி முழுவதும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அடுக்குமாடி குடியிருப்புகள் என்று வளங்கொழிக்கும் இடமாக சமீபத்திலிருந்துதான் மாறியிருந்தது கேளம்பாக்கம் பகுதி!

அவர்களையும் சேர்த்து கமிட்டி ஒன்று புதிதாக அமைக்கப்பட்டது! ஒரு குடும்பத்தில் அதிக சம்பளம் வாங்கும் ஒருவரின் ஒரு மாதச் சம்பளந்தான், ஒருகுடும்பத்தின் காணிக்கை என்று தீர்மானிக்கப்பட்டு, பங்குத்தந்தை தலைமையில் அவர்கள் வீடுகளையும் சந்தித்து ஆரம்பப் பணம் சேகரித்தார்கள்.

அப்பொழுதுதான் அந்த ஆச்சரியம் நடந்தது. அஸ்திவாரம் தோண்டும் நாள் முதற்கொண்டு தரைமட்டம் வரையுள்ள சுமார் ஆறு மாத காலமும், பங்கு மக்கள்தான் அனைத்து பணிகளையும் இலவசமாகச் செய்ய முன்வந்ததுதான் அந்த ஆச்சரியம்!

தினமும் மாலை நேரம் சுமார் 50 பேர், மாலை 5 மணி முதல் இரவு 11 மணி வரை பணிபுரிந்தார்கள் இலவசமாக.

முக்கியஸ்தர்களின் பிரத்தியேக நன்கொடை, பணமாகவும் பொருளாகவும் வந்து அவசரத்துக்குக் கைகொடுத்தது.

இறையருள் ஒன்றையே மூலதனமாக வைத்து வேலைகள் தொடர்ந்து நடந்தாலும் தொய்வில்லாமல் கொண்டு சென்றதென்னவோ, அனைத்தையும் ஆலோசித்து, திட்டமிட்டு, உணவில்லாமல் உறக்கமில்லாமல் இத்தனையும் சாதித்தது ஒரேயொருவர்தான். அவர்தான் கேளம்பாக்கம் பங்குத்தந்தை அருட்திரு ஸ்டீபன்.!

சென்னையில் கூட, சமீப காலங்களில் இந்த மாதிரியான ஒரு கோயிலை யாரும் நிர்மாணிக்கவில்லை என்பதே உண்மை!

1990களில் 200 பேர் என்று ஆரம்பித்து இன்று ஞாயிறுதோறும் 1500 பேர் வருமளவுக்கு அந்த எழுச்சி எப்படி கேளம்பாக்கத்துக்கு வந்தது.

ஒரு பைசா கூட வெளியாரிடமிருந்து வராத நிலையில், எவ்வாறு இது சாத்தியமானது.

கடந்த வாரத்தில் பங்குத்தந்தையை சந்தித்தபோது அவரது மனநிலை ஆயிரம் திருமணம் நடத்தும் பொறுப்பேற்ற ஒரு பெரிய மனிதரின் பாரம் எந்த அளவு உண்டோ அந்த அளவில் பரிதவிப்பின் வார்த்தைகள்தான் அவரிடமிருந்து வந்தது என்றாலும், இயேசுவின் மிகப்பெரிய விசுவாசத்தை சொத்தாகப் பெற்றதன் நம்பிக்கை கண்களில் தெரிந்தது.

கோயில் கட்டுவது யாருக்காக? உயிருள்ள தேவனுக்காகவல்லவா? அந்த தேவனே கூட இருக்கையில், ஏன் கவலை என்ற எண்ணம் ஒன்றே போதுமானதல்லவா.?


**இப்பொழுது சொல்லுங்கள் கிறிஸ்தவம் வளர்ந்ததற்கு காரணம் பணமா, ஏமாற்று வழியா அல்லது இயேசுவின் போதனைகளால் ஏற்பட்ட விசுவாசத்தாலா என்று...!**







**இலவச உடலுழைப்பு அளிக்கப்பட்டு பங்கு மக்கள் மற்றும் பிறரது ஆதரவுடன் வளர்ந்து வரும் ஆலயத்தின் இப்போதைய தோற்றம்**





# மரியன்னையின் மனிதநேயம்

**டி.எம். ஜேம்ஸ் மார்ட்டின்**

பாவத்திலும், அகம்பாவத்திலும் மூழ்கியிருந்த மனிதகுலத்தை புனிதமாக்கிட மனித உருவானார் இறை ஏசு. அவரை கருத்தாங்கி ஈன்றெடுத்தவர்தான் அன்னை மரியாள். சந்திரனைப்போல் அழகும், சூர்யனையும் மிஞ்சும் பிரகாசமுள்ளவள். இருப்பினும் அடக்கம், அன்பு, அமைதி, பணிவு, பாசம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல் போன்ற நற்குணங்கள் அடங்கிய மனிதநேயத்தின் பிறப்பிடமாகவும், உறைவிடமாகவும் திகழ்ந்தவள். நல்லதொரு குடும்பத் தலைவிக்கு முன்னுதாரணமாக இருந்தவள். பிறரை வஞ்சிக்கும் நயவஞ்சக சாத்தானின் நச்சுத்தலையை நசுக்கிய வீரத்தாய். எனவேதான் அன்னை மரியாளை மனித நேயத்தின் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் விடியற்காலையின் நட்சத்திரமாகவும் கொண்டாடுகிறோம்.

தான் தூய ஆவியால் கருவுற்றிருந்த காலத்திலும், தனது உறவினர் எலிசபெத் முதிர்ந்த வயதில் கருவுற்றிருப்பதை, கபிரியேல் வானதூதர் மூலம் அறிந்ததும், நடைபயணமாகவே சென்று அவருடன் சிலமாதங்கள் உடனிருந்து அவருக்கு பணிவிடை செய்து திரும்புகிறாள் அன்னை மரியாள். தேவை அறிந்து, அழைக்காமலேயே சென்று உதவுவதுதான் மனிதநேயம் என்பதை நமக்கு உணர்த்துகிறாள் அன்னை. பிறருடைய அன்பை அடைய ஆசிப்பதைவிட பிறருக்கு அன்பை அளிப்பதுதான் மனிதநேயம் என்ற உண்மையை உணரச் செய்தவள்தான் நமது அன்னை மரியாள்.

அன்னை மரியாவும், ஏசுவும் அழைப்பின் பேரில் கானாவூர் கல்யாணத்திற்கு சென்றிருந்தார்கள். விருந்தில் அனைவருக்கும் திராட்சை ரசம் வழங்குவது யூதர்களின் மரபு. அனைவரும் திராட்சை ரசம் அருந்திக் கொண்டிருந்தார்கள். இன்னும் பலர் அருந்த வேண்டிய நிலையில், திடீரென ரசம் தீர்ந்து விட்டது. பதறினர் மணவீட்டார். செய்வதறியாது திகைத்து நின்ற மணவீட்டாரின் நிலையை அறிந்த அன்னை மரியாள், தானாக முன்வருகிறாள் அவர்கள் துயர் துடைக்க. இந்த பெண் எப்படி உதவப் போகிறாள் என்ற ஆச்சர்யக்குறி கேள்விக் குறியாக மாறியது. தன் மகன் ஏசுவிடம் மணவீட்டாரின் குறையை எடுத்துரைக்க, 6 ஜாடி தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றி அனைவரையும் அருந்தச் செய்கிறார் ஏசு. முந்தியதை விட இது மிகவும் சுவையாக இருந்ததை சுவைத்த மக்கள் பரசவமாயினர். காலத்தால் செய்யும் உதவி ஞாலத்திலும் பெரிதல்லவா? இதுவே இறைமகன் ஏசு செய்த முதல் அருள் அடையாளம். இறை ஏசுவின் வல்லமையை உலகுக்கு வெளிப்படுத்தியது அன்னையின் மனிதநேயமே. ஏசு சிலுவையில் மரிக்கும்போது, யோவான் வழியாக அன்னையை நம் அனைவருக்கும் தாயாகவும், நம் அனைவரையும் அவளின் பிள்ளைகளாகவும் ஆக்குகிறார் அன்னை. விண்ணுலகம் சென்ற பிறகும், உலகில் தோன்றி நல் அறிவுரைகள் தந்து, நம்மையும், திருச்சபையையும் காப்பாற்றி வருகிறாள். லூர்து நகரில் பெர்னதத் என்ற ஏழை சிறுமிக்கு காட்சிதந்து அறிவுரை வழங்கினார். 1917இல் முதல் உலகப் போரினால் மக்கள் அல்லல்பட்ட போதும், ஆடு மேய்க்கும் 3 சிறார்களுக்கு 6 முறை காட்சி தந்து, பெரும்பானமக்கள் கற்புக்கெதிரான பாவத்தால்தான் நரகத்திற்கு போகிறார்கள் என்று உணர்த்தி, தினமும் ஜெபமாலை செய்யும்படி எடுத்துரைக்கிறார்.

தூத்துக்குடி மறைமாவட்டத்தில் சின்னரோமாபுரி என்று அழைக்கப்படும் வடக்கன்குளம். புனித அருளானந்தரால் திருமுழுக்கு பெற்று, வீரமாமுனிவரின் நற்போதையால் வாழும் அனைவரும் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். இந்தியாவின் முதல் வேதசாட்சியான அருளாளர் தேவசகாயம் திருமுழுக்கு பெற்ற மரியன்னையின் தேவாலயம். 1803ஆம் ஆண்டு, அக்டோபர் 23ஆம் நாள் இருகரம் கூப்பியிருந்த அன்னையின் கைகள் விரிய, கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. இதைக் கண்ட மக்கள், கோயில் மணி அடிக்கச் செய்து, அனைவரும் ஆலயத்தில் முழந்தாள்படியிட்டு "பொருத்தருளும் கர்த்தாவே" என்ற ஜெபத்தை சொல்லி மன்றாட, விரிந்த அன்னையின் இருகைகளும் மறுபடியும் ஒன்று சேர்ந்தது வரலாற்று உண்மை. இன்று நடக்கும் கலாச்சார சீரழிவைப் பார்த்துதான் அன்னை அன்று கண்ணீர் சிந்தியிருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?

ஒழுக்கம் தவறினால், மனிதநேயத்தை மறந்தால், மனிதன் மிருகமாக மாறுகிறான். திருப்பலிகளில் கலந்து கொள்வதாலோ, தினமும் நற்கருணை உட்கொள்வதாலோ, ஜெபமாலை ஜெபிப்பதால் மட்டும் புனிதம் அடைந்துவிட முடியாது. தீயபழக்கங்களை திருத்தி நல்லவர்களாக வாழ வேண்டும். இது பொதுமக்களுக்கு மட்டுமல்ல, நம்மை வழி நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் இல்லற வாழ்க்கையைத் துறந்து கற்பு, கீழ்ப்படிதல், தரித்திரம் என்ற மூன்று வார்த்தைப்பாடுகளை ஏசுவிடம் அர்ப்பணித்து துறவிகளாக வாழும் அருட்தந்தையர்கட்கும், அருட்சகோதரிகளுக்கும் பொருந்தும். மன்றாடும்மனம், மற்றவர்களுக்கு பணி, மாண்புகளை கடைபிடித்தல் போன்ற அன்னையின் மனித நேயப் பண்புகள் நம்மில் இருக்க வேண்டும்.

**அன்னை விண்ணுலகம் சென்ற ஆகஸ்டு 15ஆம் நாள் தாயின் முன் நின்று சபதம் ஏற்போம். மனமாற்றம் பெறுவோம். மரியன்னைக்கும் திருத்தந்தைக்கும் ஆறுதல் அளிப்போம்.** ●

# வடவை மாதாவின் ஆயிரமாயிரம் அற்புதங்கள்..!

**கி**றிஸ்தவத்தில் உள்ள பிரிவுகளில் முக்கியமானவை கத்தோலிக்க, பிராட்டஸ்டேன்ட், பெந்தகோஸ்து என்று மூன்று வகைப்படும்.

இதைச் சார்ந்த கிறிஸ்தவர்கள், அவர்களுக்குத் தெரிந்த நண்பர்களாக இருக்கும் பட்சத்தில், ஒருவரையொருவர் சந்திக்க நேர்ந்தால், ‘எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்’ என்பர். அவர்களுக்கு அது தவறாக தெரிவதில்லை.

சாதாரண மனிதர்களிடமே கூட, ஜெபிக்க சொல்லும்பொழுது, இறைவனையே ஈன்ற அன்னை மரியாவிடம், தமக்காக ஜெபிக்க வேண்டி கேட்டுக்கொள்ளுவதில் தவறேயில்லை என்று ஆணித்தரராக போதிக்கிறது கத்தோலிக்க கிறிஸ்தவம்.

இது நூற்றுக்கு நூறு உண்மை என்பது வேளாங்கண்ணி போன்ற இடங்களுக்குச் சென்று வந்தவர்களிடம் கேட்டால் தெரியவரும்.

அதுபோலவே, வடக்கன்குளத்திலுள்ள மாதாவின் அற்புதங்களோ, ஆயிரமாயிரம்..!!



**வ**டவை மாதா குரலொலி பத்திரிக்கை *1989*-ம் வருடம் ஆரம்பித்த பின்பு, அதன் பின்னர் வெளியிடப்பட்ட இதழ்களில், வடக்கன்குளம் திருவிழா காண வரும் பக்தர்களிடம், மாதாவின் அற்புதங்களை, அவர்கள் கூற, அதனை சுருக்கமாக, தொடர்ச்சியாக வெளியிட்டு வந்திருக்கிறோம்.

அவற்றை மீண்டும் பிரசுரிப்பதன் மூலம் மாதாவின் அற்புதங்கள் எப்படிப்பட்ட சிறப்பு நிறைந்தவை என்பது தெரியவரும்!

அந்த அற்புதங்களை சேகரிக்க நாம் செய்த முயற்சிகள் பற்றியும் அந்த இதழ்களில் குறிப்பிட்டிருந்ததை மீண்டும் விவரித்தால் மட்டுமே அதன் சிறப்பு, உங்களுக்கும் தெரியவரும்.

**வ**டவை மாதாவை தரிசிக்க மூன்று வகையான மக்கள் வருவது வாடிக்கை. உள்ளூர் மக்கள், வெளியூர் திருயாத்ரிகர்கள், வெளியூர் பொழுதுபோக்கு ஆசாமிகள் என்பவரே அவர்கள்.

இவர்களுள் திருயாத்திரைக்கு வருபவர்கள்தான் *75* சதவீதம் பேர். அவர்கள் கோயில் வளாகத்தை வந்தடைந்ததுமே, நேராக கோயிலினுள்ளே மாதாவின் சுரூபம் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் இடத்துக்கு வருவதே வழக்கம்.

ஆகவே, அவர்கள் வருகின்ற வழியில் நின்றாலேயே, அவர்களிடம் சுலபமாக பேட்டி எடுத்துவிடமுடியும்.

இதில் என்ன ஆச்சரியமென்றால், நம்மைக் கடந்து அவர்கள் செல்லும்போதே, அவர்களை வலியச் சென்று தடுத்தி நிறுத்தி மாதாவைப் பற்றி கேட்டவுடனேயே மடைத்திறந்த வெள்ளம் போல, எந்தவித தயக்கமுமின்றி, தாம் பெற்ற அற்புதத்தை விவரிக்க ஆரம்பித்து விடுவார்கள் என்பதுதான் நாங்கள் கண்ட அனுபவம்.

ஆக, நாம் தடுத்து நிறுத்தி பேட்டி கொடுக்க தூண்டுபவர்கள் வெறும் இருபது பேரே!



தடுத்து நிறுத்துபவர்களாகிய இந்த இருபது பேரிடம் மட்டுமே இத்தனை அற்புதம் என்றால் வருகின்ற சுமார் ஒரு லட்சம் பேருமே பெற்றிருக்கும் அற்புதங்கள் நிச்சயமாக ஒரு லட்சம் இருக்குமல்லாவா...?

*1990* மற்றும் *1995* இதழ்களில் இருந்து எடுத்த சில அற்புதங்களை மட்டும் இங்கே காணலாம்.!

## பித்தப்பை கல் கரைந்தது

என் கணவருக்கு பித்தப்பையில் கல் இருந்ததால் பயங்கர வலி. அதோடு நெஞ்சு காந்தல் ஏற்பட்டது. மருத்துவரிடம் சோதித்ததில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமெனக் கூறினார். என் கணவரின் வலியை நீக்க புதுமை பரலோக மாதாவிடம் வேண்டினேன். அதே சமயம் மாத்திரையும் கொடுத்து வந்தேன். புதுமை பரலோக அன்னையின் அருளினால் என் கண்ணீர் வேண்டுதலினால் அறுவை சிகிச்சை இல்லாமல் என் கணவர் பூரண நலம் பெற்றுள்ளார். என் கணவர் நலமாக வாழ புதுமை பரலோக மாதா அருளியமைக்கு என் நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

**மரியம்மாள்,** வடக்கன்குளம்

## காணாமற் போய் மீண்ட சிறுவன்

*5.5.95*-ல், பணகுடியில் நடந்த கல்யாண வீட்டிற்கு செட்டிக்குளத்திலிருந்து வந்துள்ள ஒரு குடும்பத்தினர் தங்களது *4* வயது பாலகனை தவற விட்டுவிட்டனர். பல திக்குகளிலும் ஓடி அலைந்தும் காண முடியாமல் வேதனையடைந்தனர். இறுதியாக புதுமை பரலோக அன்னையிடம் மன்றாடி ஒப்படைத்துவிட்டு புதியம்புத்தூக்கு வேனில் வந்து கொண்டிருந்தோம். என்ன அதிசயம்! பாலகன் பணகுடி வேளாங்கண்ணி ஆலயத்திற்கிடையே நடுக்காட்டில் எந்தவித ஆபத்திலும் சிக்காமல் நேரே நடந்து கொண்டிருப்பதைக் கண்டுபிடித்தோம். இது மாதாவின் புதுமை அல்லவா!

–**சிஸ்டர். சால்வினா**
திருக்குடும்ப பள்ளி,வடவை.

## பல ஆண்டு தூக்கமின்மை தீர்ந்தது

இரண்டு ஆண்டுகளாக தூக்கம் இலலாமல் உருண்டேன், புரண்டேன் தீராத வயிற்று வலியினால்...! பல டாக்டர்களிடம் அணுகியும் பயனில்லை. ஆயிரக்கணக்கான பணம் விரயம் செய்த என் பெற்றோர் வேதனையடைந்துள்ள நேரம். அடுத்த வீட்டு அம்மா மேரி என்பவர்கள் என்னையும் என் பெற்றோரையும் கூட்டிக்கொண்டு *23.10.1994*–ல் வடக்கன்குளம் வந்து சேர்ந்தார்கள். *11:30* வழிபாட்டில் கலந்து அழுதேன். அந்த வேளையில் ஒரு குளிர் உணர்வு தெரிந்தது. அவ்வளவுதான், இப்போது நல்ல சுகமாகி முதல் சனிக்கிழமை தோறும் மாதாவை தரிசிக்க வருவது மட்டுமல்லாமல், ஒவ்வொரு அக்டோபரிலும், மாதா காட்சியளித்த நாளையொட்டி நடைபெறும் விழாவுக்கு வரத் திட்டமிட்டுள்ளோம். (நாங்கள் இந்து சமூகத்தைச் சேர்ந்தவர்கள்)

**நி.அப்பு உன்னி,** தாந்தோகு
கேரளா.

## அறுவை சிகிச்சையின்றி குணம்

என் பெயர் நான்சி. என் கற்பப் பையில் கட்டி இருந்தது. அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். ஆபத்தும் ஏற்படலாம் என்று

டாக்டர் சொன்னார். புதுமைக் காட்சி தந்த வடக்கன்குளத்து மாதாவைப் பற்றி கேள்விப்பட்ட என் பெற்றோர் கடந்த 14.8.1994–ல் வடக்கன்குளத்து திருவிழாவுக்கு அழைத்து வந்தார்கள். மனம் வெம்பி வேண்டிக்கொண்டு சுவாமியை மந்திரிக்கச் சொல்லி, கோயில் கடையில் இருந்து மாதாவின் புதுமை எண்ணை வாங்கிக்கொண்டு போய் தடவி வந்தேன். ஒரு மாதத்தில் சுகமானேன்.

– ஒரு பக்தை

## தீராத நெஞ்சுவலி தீர்ந்தது

டாக்டர்களால் கைவிடப்பட்ட தீராத நெஞ்சுவலியானது கடந்த 23.10.94–ல் நடைபெற்ற 11:30 மணியளவில் மாதா காட்சி கொடுத்த வழிபாட்டில் கலந்து உருக்கமாக அழுதபின், நன்கு குணமாகியது.

**ரோஸ்லீன்,** நெய்யாற்றங்கரை.

## தீராத வயிற்று வலி...

நான் வயிற்றுவலியினால் மிகவும் துன்பப்பட்டேன். பல மருத்துவர்கள் முடியாது என கைவிட்ட நிலையில் பரிசுத்த புதுமை பரலோக அன்னையிடம் மிகவும் உருக்கமாக விசுவாசத்துடன் ஜெபித்தேன். அன்னையும் என் மன்றாட்டைக் கேட்டு எனக்கு நல்ல சுகம் தந்தார். எனக்கு நல்ல சுகம் தந்த வடவை பரிசுத்த அன்னைக்கு என் நன்றி.

**லாசர்,**கன்னங்குளம்

## தொண்டை, முதுகு வலிகள் தீர்ந்தன

நான் ரொம்ப நாட்களாக தொண்டை மற்றும் முதுகுவலியினால் மிகவும் கஷ்டபட்டேன். பல டாக்டர்களிடம் மருத்துவம் பார்த்தும் சுகம் கிடைக்கவில்லை. எனவே, அன்னையிடம் கண்ணீருடன் மன்றாட, அவளும் என் மன்றாட்டைக் கேட்டு எனக்கு நல்ல சுகம் தந்தார். அவருக்கு என் நன்றி.

– **ஒரு அன்பர்,** வடக்கன்குளம்.

## பத்து ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தை!

என் பெயர் பவுலின். எனது ஊர் பத்தினாதபுரம். எங்களுக்கு பத்து ஆண்டுகள் கழித்து ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்து ஒன்பது ஆண்டுகள் தீராத நோயினால் துன்பப்பட்டது. திக்கற்றவர்களுக்கு நலன் அளிக்கும் புதுமை பரலோக அன்னையை வேண்டினேன். அதே போன்று வெளிநாட்டில் இருக்கும் என் கணவரும் புதுமை மாதாவை வேண்டினார்கள். இருவரின் மன்றாட்டுக்கும் இரங்கி என் மகனின் தீராத நோயை குணமாக்கிய புதுமை பரலோக அன்னைக்கு என் நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

– **பவுலின் ஆசீர்வாதம்**

## அல்சர் நோய் நீங்கியது

நான் கன்னங்குளத்தைச் சேர்ந்தவள். என் கணவர் தீராத அல்சர் (குடல்புண்) நோயினால் கஷ்டப்பட்டார்கள். நீண்ட காலம் மருத்துவரிடம் சிகிச்சை செய்தும் குணமாகவில்லை. வடக்கன் குளத்தைச் சேர்ந்த என் சகோதரிக்கு எழுதியிருந்தேன். அவர்கள் புதுமை பரலோக அன்னையிடம் வேண்டினால், நிச்சயம் குணம் கிடைக்கும் என பதில் எழுதியிருந்தார்கள். பம்பாயில் இருந்தபடியே என் கணவரின் அல்சர் நோய் குணமாக தினமும் வேண்டினேன். என் கண்ணீர் மன்றாட்டில் என் கணவரின் அல்சர் நோயை குணமாக்கியதோடு மருத்துவரும் "நோய் நீங்கிவிட்டது" என்று கூறினார்கள். என் கணவரின் நோயை நீக்கி நல்ல ஆரோக்கியத்தைத் தந்த புதுமை மாதாவுக்கு என் இதய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

–**செல்வம்,** கன்னங்குளம்.



## துவண்ட கால்கள் பலம் பெற்றன

வடவை பரலோக மாதா அருளால் பம்பாயில் பெரிய டாக்டர் கரண்டு ஷாக் கொடுக்க வேண்டும் என்ற ஆலோசனைப் படி ஊர் வந்து சேர்ந்த எனது இரு கால்களுக்கும் சக்தியும் பலனும் கொடுத்து நடக்க செய்த வடவை பரலோக மாதாவுக்கு கோடானகோடி நன்றி.

**–மேரி எல்சி அமல்ராஜ்,** பைப்படித்தெரு.

## உச்சிமாளி, ஓடைத்தெரு:

"எனக்கு 3 மகன்களும் 2 மகள்களும் உள்ளனர் நான் ஒரு பரம்பரை இந்துவாக இருந்தாலும் அன்னையின் ஆலயத்திற்கு அடிக்கடி வருவேன். காரணங்கள் பல.

என் மூத்தமகன் (22 வயது) அலகையினால் துன்புற்று கொண்டிருந்த சமயத்தில் புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் சுமார் ஒன்றரை வருடங்கள் வைத்திருந்தேன்.

அவர் அருளால் நன்கு சுகமாகிவிட்டது. அதுவே, எங்கள் குடும்பத்திற்கு ஒரு மனமாற்றம் தந்தது. அருகிலிருக்கும் அன்னையின் ஆலயத்திற்கு தினமும் வரத் தொடங்கினேன்.

1) ஒரு முறை மிக அவசரமாக பணம் தேவைப்பட்டது. பலரிடம் கேட்டும் கிடைக்கவில்லை, மாதாவிடம் வேண்டினேன். நான் எதிர்பாராத நபர் ஒருவரிடம் இருந்து உதவி கிட்டியது.

2) மற்றும் ஒரு முறை அதே மகன் காணாமல் போய்விட்டான். அன்னையிடம் தினமும் வந்து அழுது முறையிட்டேன். நேர்ச்சை செய்தேன். ஒன்றரை மாதங்கள், கழித்து காணாமல் போன மகன் கிடைத்தான். மாதாவிற்கு என் நன்றிகள் பல. நான் இந்த ஆலயத்திற்கு எப்போது வந்தாலும் பரலோகத் தாயிடம்தான் முதலில் செபிப்பேன். நான் பல ஆலயங்களில் மாதா சுரூபத்தைநப பார்த்துள்ளேன். ஆனால் அவைகளினின்று நம் வடவை அன்னை தோற்றம் மிகவும் அற்புதமாக உள்ளது. வடவையில் காட்சியளித்த புதுமை அன்னை அல்லவா அவள்..!"

## மோத்திகா ரஞ்சன் –தும்பாபீஸ் தெரு

"என்னைப் பொறுத்தவரை ஆண்டவரிடமும் செபிப்பேன் அன்னையிடமும் செபிப்பேன். ஆனாலும் பரலோக அன்னை வழியாக விசேஷமாக செபிக்கும் போது அவை நிச்சயமாக கிடைக்கின்றன. அன்னையிடம் இருந்து நான் பல உதவிகளைப் பெற்றுள்ளேன். என கணவர் வெளிநாடு செல்ல அன்னை தான் எனக்கு துணை செய்துள்ளார். அழகான ஓர் ஆண் குழந்தையும் அன்னையின் அருளால் தான் கிடைத்துள்ளது. அன்னை இனியும் எம்மை வழி நடத்துவார் என நம்புகிறோம் அன்னைக்கு எங்களது கோடான கோடி நன்றி".

## சுப்பம்மாள் வேல்கம்பர், ஓடைத்தெரு

"என் பெயர் சுப்பம்மாள். எனக்கு 4 மகன்களும் 2 மகளும் உள்ளனர். நான் ஒரு இந்துவாக இருந்தாலும், கடவுள் மீதும், வடவை மாதா மீதும் நம்பிக்கை உண்டு. கடந்த 10 வருடங்களாக இரவும் பகலும் மாதாவைத்தான் நம்புகிறேன். என்னையும் என் குடும்பத்தையும் காப்பாற்றி வருவது மாதாதான். மாதாவின் மீது உள்ள பக்தியினால் அன்னையின் ஆலயத்திற்கு வரிகூட செலுத்தி வருகிறேன். என் மூத்த மகளுக்கு திருமணமாகி குழந்தை பாக்கியம் இன்றி, மன வேதனையோடு இருந்தோம், அன்னையிடம் அழுது முறையிட்டேன். என் மன்றாட்டு கேட்கப்பட்டு இப்போது குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது. அன்னையின் உதவிக்கு நன்றியாக பிள்ளைக் கொடி காணிக்கையாக எடுத்து வைத்தேன்".



# இறைவன் நம்மோடு இருக்கின்றாரா..?

## – கண்டுபிடிப்பது எப்படி..?

போராட்டங்கள் கொண்ட வாழ்க்கைதான் உண்மையான கிறிஸ்தவ வாழக்கை...!

உலகிலுள்ள எல்லா பொருட்களிலும், செயல்களிலும் நல்லது என்றும் கெட்டது என்றும் இரண்டு வகை உள்ளது.

சகலத்திலும் நல்லவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து வாழ எண்ணும்போது மனது கிடந்து துடிக்கின்றதே 'எதைத் தேர்ந்தெடுப்பது' என்று, அதுதான் போராட்டம்!

உலகில் பிறந்த அனைவருமே பாவம் செய்து கெட்டுப் போனவர்கள்தான், இயேசு தவிர! ஆனால், இயேசு சிலுவை சுமந்து ஜெருசேலம் வீதிகளில் சென்றபோது மூன்று முறை வீழ்ந்து எழுந்ததுபோல, கெட்டவற்றை சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தேர்ந்தெடுக்கும் ஒருவன், அதிலிருந்து மீண்டு எழுந்தே ஆகவேண்டும். தவறுகளைத் திருத்தியே ஆகவேண்டும்.



திருந்தினால் சரி... ஆனால் திருந்தாமல் கெட்டவற்றிலேயே விழுந்துகிடப்பவன் கதி?

ஒன்றும் ஆகப் போவ தில்லை. அந்த கெட்டவைகளிலேயே பழகி, ஊறி, அமிழ்ந்து, அதுவும் ஒரு சந்தோஷம் தான் என்று கிடப்பான்..!

அவனிடம் பாவம், புண்ணியம், கிறிஸ்து என்று சொல்லிப் பாருங்கள்! சிரிப்பான்!

“நான் நன்றாகத் தானிருக் கிறேன். உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ” என்பான்.

இந்த மாதிரி மக்கள்தான் உலகத்தில் பெரும் பாலானவர்கள்! எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இது பொருந்தும்.

இவர்களும் தங்களை ஆன்மிகவாதி என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுவார்கள். உண்மையான கடவுளைத் தொழுபவர்கள்தான் ஆன்மிகவாதிகள்! மந்திரம் போடுபவர், பில்லி சூனியம் வைக்கிறவர் சாத்தானின் அடிமைகள்.



நெற்றியில் பட்டை போட்டால், கழுத்தில் சிலுவை அணிந்தால், தலையில் குல்லா அணிந்தால் போதும் என்றும், நாம்தான் தவறாது கோவிலுக்குச் செல்லுகிறோமே ஆன்மிகவாதி தானே என்பார்கள், இவர்கள்!


உண்மையான தேவனை வணங்குவது சரி... உள்ளத்தில் சந்தோஷம் உள்ளதா?

விட்டில் பூச்சிக்கு பிரகாசமான ஒளிதான் சந்தோஷம். எறும்பு கூட்டத்துக்கு தேன் கிண்ணம்தான் சந்தோஷம். அளவுக்கு மீறினால் அதிலேயே விழுந்து செத்துப் போவதுங்கூட அவைகளுக்கு தெரியப்போவதில்லை.

தீமையிலிருந்து அல்லது பாவத்திலிருந்து எழுந்து மீள, தனது பலம் போதவே போதாது. இறைவன் அருள் நிச்சயம் தேவை. அவரை வேண்டிக்கேட்டால் மட்டுமே, அவர் பாவத்திலிருந்து மீள உதவுவார். கெட்ட செயல்கள் நூற்றுக்கு நூறு விலகும். ஒரு மனிதன் தனது பலத்தால் மட்டும் பாவத்தை விட்டு விலகவே முடியாது!

'என்னைப் பின்பற்றுபவன் எனது சிலுவையை சுமந்துகொண்டு என் பின்னால் வராவிடில், எனக்கும் அவனுக்கும் பங்கில்லை' என்று இயேசு ஆணித்தரமாகக் கூறுகிறார்.

ஆக, நல்லதைத் தேர்ந்தெடுத்து வாழ்பவர் களுக்குக் கூட கஷ்டங்கள் வரும். சொல்லப்போனால், அவனுக்குத்தான் அதிக கஷ்டம் வரும். பாவத்தில் வீழ்த்துவதற்காக சாத்தான் சுற்றிச் சுற்றி வருவான்.



இறைவன் நம்மோடு இருக்கிறாரா என்பதைக் கண்டுபிடிப்பது எப்படி?

இயேசுவால் தேர்ந்தெடுக்கப்படும் மனிதன், 'சந்தோஷமாக' இருப்பான்.

எதற்கும் கவலைப்படாமல் செயல் செய்யும் பக்குவம் அவனுக்கு வந்துவிடும். துன்பமோ இன்பமோ இரண்டும் ஒன்றாகவே அவனுக்குத் தெரியும். ஏனென்றால் ஆழ்ந்த 'அமைதி' அவனிடம் குடிகொண்டிருக்கும்.

நிம்மதியாகத் தூங்குவான், வியாதிகள் இருந்தாலும் இயல்பாக தன்னை வைத்துக்கொள்ளும் உறுதி அவனிடம் இருக்கும்.

எதிரிகள் ஆயிரம் பேர் சூழ்ந்தாலும் அவன் 'இயேசுவை' ஒரு கணம் நினைப்பான். அவர் கூட இருப்பதாக நம்புவான். தன்னந்தனியே பாரத்தை சுமப்பதைவிட, கூட இருப்பவனும் சுமந்தால் சுலபமாகி விடுமல்லவா? அதுபோலதான் இதுவும்!

அந்த அளவுக்கு இயேசுவைத் துணையாகக் கொள்ளும்போது முழுமையான பரிசுத்தம் கண்டிப்பாக அவனுக்குத் தேவை. பரிசுத்தம் என்றால் என்ன? (பார்க்க: பெட்டிச்செய்தி:சு(செ)த்தவாழ்வு)

நூற்றுக்கு நூறு பரிசுத்தம் தேடி படிப்படியாகக் செல்லச் செல்ல இறையியல்புப்படி, 'அவரை' கொஞ்சங் கொஞ்சமாக நெருங்க

முடியும்! குற்றங்குறைகளை படிப்படியாகக் களைய முயற்சி எடுக்கும் ஒருவர் 100% விசுவாசத்தைக் கொண்டு, எளிதாக இறையருளைப் பெற்றுவிட முடியும். ஏனென்றால் இறைவனுக்கு மிகவும் பிடித்தவர் யாரென்றால், தன்னை நம்புவர்கள்!! ஒரு குழந்தை, தந்தையை நம்புவது போல நம்ப வேண்டும் என்று அவர் எதிர்ப்பார்க்கிறார்.

அடுத்து இறைவனுக்கு (இயேசுவுக்கு) பிடித்தது அவர்மேல் பற்று, உறுதி அல்லது ஆசை! அவரை மகிமைபடுத்தும் காரியங்களில் ஈடுபடுபவனை அவர் ஒருபோதும் கைவிடவே மாட்டார்.

சரி... இதை எப்படி உணர்வது..?

அவரது உதவி வேண்டி, கண்களை மேலே ஏறெடுத்தாலே போதும் எங்கிருந்தோ ஒரு பலம் வருவது போல தெரியும்! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அனுபவம் ஏற்படும். சிலருக்கு அவரை நினைத்த மாத்திரத்திலேயே இனந்தெரியாத மகிழ்ச்சி இருதயத்தில் தோன்றும். இருதயம் சந்தோஷ சமதானத்தால் துள்ளும். கண்கள் ஆனந்தத்தால் பனிக்கும். கோயிலின் விசேஷ தினங்களில் பலிபீடமருகே இறைவனின் பிரசன்னம் இருப்பதை 'உணருவான்'! மனதில் ஜிவ்வென்ற சந்தோஷம் வரும் இந்த உணர்வு ஒரு நிமிடமாவது நீடிக்கும்!

ஆனால்—

இவையெல்லாம் கைகூட வேண்டுமென்றால் ஒரேயொரு வழிதான், மேலே கூறப்பட்டவை தவிர!

ஆம்! போராட்ட வாழ்வில் தன்னை உறுதியாக்கி, தினமும் குடும்ப செபம், அடிக்கடியான ஒறுத்தல் முயற்சி, தினமும் பலிபூசை காணுதல், குடும்ப ஜெபம், செய்யாவிடில் தனி ஜெபம் ஏழைகளுக்கு மனதுருகி முடிந்த உதவி செய்தல் அவ்வப்போது உபவாசமிருத்தல் ஆகிய இவற்றில் எதாவது குறைந்தபட்சம் இரண்டினை ஒழுங்காக தொடர்ந்து செய்து பாருங்கள்!

அப்போது—

உணவை ருசிப்பது போல இயேசுவை ருசிக்கமுடியும்!

நம் வாழ்வின் நன்மைகளை தடுக்க எந்த கொம்பனாலும் முடியாது. ▪

# சு(செ)த்த வாழ்வு..!



இமயமலைக்குச் சென்று, யாருமில்லா இடத்தில் தியான நிலையிலிருந்தால் நிம்மதி கிடைக்கும் என்கின்றனர் சிலர்.

கடற்கரையோரம், அப்படியே கடலையேப் பார்த்துக் கொண்டிருந்தால் கூட ஒரு வித அமைதி கிடைக்கிறது என்பர் வேறு சிலர்.

அப்படியானால் இமயமலையிலிருந்தும் கடற்கரையிலிருந்தும் திரும்பி வந்து வீட்டினுள் நுழைந்துவிட்டால், நிம்மதி போய்விடுமா?

ஒரு பாட்டிலுள்ளே, அழுக்கு திரண்டு அடைத்துவிட்டால், உள்ளே கொட்டப்பட்டிருக்கும் தண்ணீர் இலகுவாக வெளியே வருமா?

அதுபோன்றே நம் உள்ளத்தைத் தூய்மையாய் வைத்துக் கொள்வது மிகவும் அவசியம். சிற்றின்பம், பணவெறி, முரட்டு புத்தி இவை மட்டும்தான் பாவம் என்பதல்ல!

ஒவ்வொரு மனிதனும் அவனையறியாத ஒரு முக்கிய குணக்குறைபாடோடு அலைகிறான் என்பதே உண்மை!

உதாரணத்துக்கு, ஒருவர் பார்க்க நல்லவர்! அவரால் குடும்ப வாழ்க்கையை நடத்தி குழந்தை பெற இயலாது என்று தெரிந்தும் திருமணம் செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இது எவ்வளவு பெரிய ஏமாற்று? அடுத்தவருடைய வாழ்வை, தெரிந்தே சீரழிப்பது பெரும் பாவமல்லவா?.

அதே நபருக்கு குழந்தையைத்தத்து எடுக்கவோ, வேறு தீர்வு முறையையோ கூறாமல், அவரை தனிமரமாக்கி அவரது சொத்துக்களை 'ஆட்டையைப்' போடும் உறவினர்களும் இருக்கவே இருக்கின்றனர்.

எனது நண்பருக்கு ஒரு பாஸ்டரை நன்றாகத் தெரியும். வீட்டிலேயே 'சர்ச்' வைத்துக் கொண்டு ஊழியம் செய்கிறவர். இந்த பாஸ்டர் தனது நடிப்பின் மூலம், நண்பரை ஏமாற்றி லட்சக்கணக்கில் பணம் பறித்து, இன்றைக்கு நண்பரின் நிலைமை பரிதாபம்! அதாவது கடன் பெற்றுத் தருகிறேனென்று, வெற்று காசோலையை வாங்கி வைத்துக் கொண்டு, நண்பர் மறந்த நேரத்தில், அவரது வங்கிக் கணக்கில் பணம் இருக்கும் நேரம் பார்த்து, காசோலையைப் பயன்படுத்தி பணத்தை திருடிவிட்டார் அந்த நபர் திருப்பிக் கேட்கும் போதெல்லாம், அவர் ஊழியக்காரர், இயேசு என்னோடு இருக்கிறார் என்று பிதற்றுவதாக எனது நண்பர் வருத்தப்படுவதைப் பார்க்க மிகவும் பரிதாபம். (சாதாரண மனிதனுக்குள்ள தண்டனையைவிட, தன்னால் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் தவறும் போது, ஏழு தலைமுறைக்கு தேவன் கண்டிப்பார் என்று பைபிள் கூறுகிறது.

பெற்ற தாய், தந்தையை அவர்களது வயது முதிர்ந்த காலத்தில் கண்டு கொள்ளாமல் சாக்கு சொல்பவர்கள்; கூடப்பிறந்தவர் சொத்தை அபகரிக்க திட்டம் போடுபவர்கள், அடுத்தவர் பெயரைக் கெடுக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைபவர்கள், என்பன போன்று சிறிதும் பெரிதுமான விதவிதமாக ஏமாற்று, பொய், புரட்டு, பித்தலாட்டம் என்று சளைக்காமல் செயல் புரிபவர்கள் இன்று ஏராளம்!

மேற்கண்டவர்கள் ஞாயிறு தோறும் ஒழுங்காகக் கோயிலுக்குச் செல்லுபவர்களாகவும், பார்ப்பதற்கு பரமசாது போன்றும் காணப்படுவார்கள். அவர் ஒருபோதும் மேற்கண்ட குணங்களால் பாதிக்கப் பட்டிருப்பதாக உணரமாட்டார்கள், எவ்வாறு ஆரம்பத்தில் புற்று நோய் இருப்பது தெரியவராது என்பது போல..!

இந்த மேற்படி நபர்கள் இறைவனை சுத்த இருதயத்தோடு, தேட முயற்சி செய்தால் மட்டுமே, கடவுள் அவரிடம் இருப்பதை, அவரே உணரும்படி செய்வார். அதிலிருந்து மீளும் மனதையும் பலத்தையும் தருவார்.

ஆக, இதைப் போன்றவர்கள், தனது சொந்த பலத்தின் மூலம், இப்படிப்பட்ட குணக்குறைபாடுகளிலிருந்து மீள முடியாது, இறைவனது பலம் தேவை.

இவர்கள் இறைவனிடம் 'சரணாகதி' அடையும் பட்சத்தில், இவர்களும் இறைவனது பிரசன்னத்தை உணர்ந்து மெய்யான சந்தோஷத்தை பெறுவது உறுதி. என்பதென்னவோ, உண்மை! ▪

# இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார்.....

## -இஸ்லாம் சொல்லுவதென்ன ?


கேளம்பாக்கத்தில் அமைந்துள்ள ஒரு இஸ்லாமிய மசூதிக்கு அருகில் ஒரு அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டிருந்தது.

“இயேசு... கடவுளா..? என்ற தலைப்பில் ஒரு மாநாடு நடைபெறுவதாகவும், அதற்கு இஸ்லாமியப் பெருமக்களனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென்றும் அதில் கோரிக்கை வெளியிட்டிருந்தார்கள்.

டாக்டர் ஷாகிர் நாயக் என்பவர். நமது கிருஸ்துவ மதத்தின் பல பிரிவுகளிலும் உலகமெங்கும் இருக்கும் பிரசித்தி பெற்ற மதபோதகர்கள் போன்று, இவர் இஸ்லாமிய மதத்திலுள்ள மிகப் பெரிய போதகர்.

இவர் பேசுகின்ற கூட்டங்களுக்கு பல்லாயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் வருகின்றார்கள்.

பொதுவாக கிறிஸ்துவ மத போதகர்களோ, நமது கத்தோலிக்க சபையிலுள்ள அருட்பணியாளர்களோ எங்காவது, எப்போதாவது ஒரு வார்த்தையேனும் குரான் வேத நூலைப்பற்றியோ இஸ்லாமியர் பற்றியோ பிரசங்கம் செய்திருப்பதைக் கேட்டிருக்கிறீர்களா அல்லது கேள்விப்பட்டிருக்கிறீர்களா... இல்லை என்பதுதான் நிச்சயம். ஏனென்றால் அவர்களுக்கு இயேசுவே போதுமானவர். மற்றவைகள் அவர்களுக்குத் தேவையில்லை.



டாக்டர் ஷாகிர் நாயக்

ஆனால், இந்த டாக்டர் ஷாகிர் நாயக்கோ, தமிழன் டிவி போன்ற சில டிவிக்களில் வருகின்ற இஸ்லாமிய நிக்ச்சிகளை நடத்தும் பல இஸ்லாமிய பெருமக்களோ, என்ன நிகழ்ச்சி நடத்தினாலும் இயேசுவைப் பற்றி கூறாமல் இருப்பதில்லை.

கிறிஸ்துவ நண்பர் யாராவது கூட்டத்திலிருந்து கிறிஸ்துவைப் பற்றி கேள்வி கேட்பது போலவும், அதற்கு அந்த போதகர் பதில் கூறுவது போலவும் அமைக்கப்பட்டிருக்கும் அந்த சொற்பொழிவு நாடகம்!

இயேசுவைப் பற்றி திரும்பத்திரும்ப எல்லா கூட்டங்களிலும் ஒரே விஷயத்தைக் கீறல் விழுந்த இசைத்தட்டு போல் கூறுகிறார்களென்றால், அதற்கு என்ன அர்த்தம்...?

கிறிஸ்து அந்த அளவுக்கு இவர்களைப் பாதித்திருக்கிறாரா.?

கொஞ்சம் சிந்தியுங்கள். அதாவது நம்மையே நாம் நினைவில் கொள்ளுவோம். நாம் அடிக்கடி நினைப்பது யாரை...? நமக்கு மிகவும் விருப்பப்பட்டோரை அல்லது நமது எதிரியை...!



விரும்புபவரை நினைப்பது அன்பினால்..! எதிரியை நினைப்பது அவனை எப்படி எதிர்கொள்ளுவது என்ற நினைவு மேலோங்குவதால்..!

இங்கு, இஸ்லாமியர்கள் இயேசுவை அன்பாகப் பார்க்கிறார்களா எதிரியாகப் பார்க்கிறார்களா?

எதிரியாக பார்க்கவும் வாய்ப்பில்லை, ஏனென்றால், இயேசு என்பவர் மரியம் என்ற பெண்ணின் மைந்தன் என்றும் இந்த இயேசு முகமது நபி என்ற இறைத்தூதருக்கு முன்னர் வந்த இறைத்தூதராகிய ஈசா நபி என்றும் குரானில் கூறப்பட்டுள்ளது.

குரானில் ‘சுறா’ பத்தகத்தில் 19வது-–அத்தியாயம் முழுக்க மரியம் என்ற நமது கன்னிமேரியைப் பற்றியதுதான். இஸ்லாமியர்கள் இயேசு என்ற ‘ஈசா நபி, மரியம் என்ற மரியாளின் வயிற்றில் பிறந்தவர் என்பதையும், மரியம் ஒரு கன்னி என்பதையும் மறுக்கவில்லை. ஆக, மீண்டும் விஷயத்துக்கு வருவோம்.

இவர்களது எல்லா பிரசங்கங்களிலும் இயேசு கடவுளில்லை என்று கூறுவதையும் ஒரு வகையில் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால், ஒரு வாதத்துக்காக கீழே ஒரு விஷயத்தை யோசித்துப் பார்க்கலாம். நமது வாழ்க்கையில் கூட பார்க்கலாம்: நமக்கு ஒரு ஏக்கர் நிலம் இருக்கிறது, அதன் விலை பல கோடி அல்லது லட்சங்களாகக் கூட இருக்கலாம்.



‘தஜ்ஜால்’ என்ற அந்திக் கிறிஸ்து

அந்த நிலத்தில் ஒரு பிரச்சினை!. அதைத் தீர்த்து வைக்க நமக்கு மிகவும் வேண்டிய ஒருவர் வருகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த நாளை எவ்வளவு சிறந்த நாளாக நாம் எதிர் நோக்கியிருப்போம்.? நமது தாய் தந்தையர், உற்றார் உறவினரை விட அவரைத்தானே கனம் செய்ய வேண்டியிருக்கும்...?

ஆக, நமக்கு ஞாயம் செய்யப் போகும் அந்த நியாதிபதிதானே, மேலானவர் இதுதானே நாட்டு நடப்பு...! (பிறகு இதனை ஒப்பிட்டுப் பார்க்கலாம்).

ஒருமுறை ஒரு தமிழ் தொலைக்காட்சி, பிரபல இசையமைப்பாளரும் இஸ்லாமியப் பெருமகனாருமான ஏ.ஆர். ரஹ்மானிடம் ஒரு பேட்டி எடுத்தார்கள்.

பேட்டியின் கடைசிக் கேள்வி நீங்கள் உலகத்தில் எதிர்பார்க்கும் ஒரு விஷயத்தைக் கூறுங்கள் என்று ! ஏ.ஆர் ரஹ்மான் கூறியது” “இயேசு கிறிஸ்து மீண்டும் உலகுக்கு வருவாரல்லவா அவரைப் பார்க்க வேண்டும் என்பதே எனது ஆசையும் நோக்கமும்“ என்றார். என்ன...! அவர் இஸ்லாமிய மதத்திலிருநது விலகி விட்டாரா என்ன..

அதுதான் இல்லை.!



அவர் இயேசுகிறிஸ்துவாகிய ஈஸா நபி மீண்டும் உலகத்துக்கு வருவார். உலக மக்களை ஞாயம் தீர்க்கும் பொருட்டும், 'தஜ்ஜால் 'என்ற அந்திக் கிறிஸ்துவை ஒழித்துக்கட்டவுமே அவர் வருவார் என்பதாக குரான் கூறுகிறது.

இதைத்தான் ஏ.ஆர். ரஹ்மானும் கூறினார். டாக்டர் ஷாகிர் நாயக்கும் கூறுகின்றார். ஒரு கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் 'இயேசுகிறிஸ்து மீண்டும் வருவாரா' என்று எழுப்பிய கேள்விக்கு "நபிகள் நாயகம் அவர்கள் கடைசி இறைத்துதூதராகும்.

சுறா அத்தியயம் 5 வசனம் 114 லும் மேலும் கசியாத் 70 ஆசிசுகள் உள்ளன. இயேசுகிறிஸ்து மீண்டும் வருவார் என்று சொல்லப் பட்டிருக்கிறது' என்கின்றார் ஷாகிர் நாயக்..!!

கேள்வி கேட்ட நபர் "நீங்கள் முகமது நபிதான் கடைசி இறைத்தூத் என்று இஸ்லாம் சொல்லுவதாகச சொலலுகிறீர்களே? ஆனால், இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் என்று கூறுகிறீர்கள்..? அப்படியானால்... என்று இழுக்க இந்தக் கேள்விக்கு சரியான பதிலைக் கூறாமல் வேறு கருத்துக்கு தாவி தப்பித்துக் கொள்ளுகிறார் இந்த ஷாகிர் நாயக்.!

ஆக, இங்கு நாம் சிந்திக்க வேண்டிய கடைசி விஷயம் இதுதான்.

குரான் கூற்றுப்படி இந்த சாதாரண ஈஸா நபியாகிய இயேசு என்ற இறைத்தூதர் கடைசிக்காலத்தில் மதவிரோதியான 'தஜ்ஜால்' என்ற அந்திக்கிறிஸ்துவை அழித்து ஞாயம் செய்ய வருகின்றாரென்றால், ஞாயாதிபதியாகிய அவர்தானே குரானின் தலையான நாயகன்.?

அவர் இறை தூதரல்ல, இறை மகன், அதனால்தானே அல்லாவாகிய பரமபிதா தனது சொந்த மகனையே நடுத்தீர்க்க அனுப்புகிறார் என்று தானே அர்த்தம்?

இவ்வுலக வாழ்வில் நமக்கு தாய் தந்தையருக்கு அடுத்து நமக்கு ஞாயம் செய்யும் ஞாயாதிபதிதானே முக்கியம்? அதுபோல ஞாயந் தீர்க்க வரவிருக்கும் ஈஸா நபி தானே முக்கியம்?


இஸ்லாமியர்கள் புரிந்து கொண்டாலும், ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதுதான் நூற்றுக்குநூறு உண்மை.

**ஆனால், நடுத் தீர்ப்பின் நாளில் அந்த 'ஈஸா நபியே' (இயேசு கிறிஸ்து) இவர்களை இரட்சிக்கட்டும்.**



குரான்படி ஈஸா நபி ( இயேசு ) தஜ்ஜாலை எதிர்த்து வெற்றி காணுதல்

# 'இயேசு தன்னை இறைமகன்' என்று சொன்னதற்கு பைபிள் ஆதாரம்... !



'இயேசு தன்னை இறைவனின் மகன்' என்று சொன்னதற்கான ஆதாரம் பைபிளிலிருந்தே ஒன்றையேனும் காட்டுங்கள் பார்க்கலாம்' என்பதே இஸ்லாமியரின் ஒரே சவால்!

காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் என்பார்கள். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று தனது வாதத்தையே வைத்து, சகஇஸ்லாமிய அன்பர்கள் கிறிஸ்துவை நம்பிவிடக்கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாக இருப்பார்கள்.

பைபிளில் சுமார் 45 இடங்களில் இயேசுதான் இறைவனின் குமாரன் என்று தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பெரும்பாலானவை அவர் கூறியதாகவும், இறைவனே தனது குரலைப் பதிவிட்டு தெளிவுபடுத்துவதாகவும் காணப்படுகிறது. அவற்றுள் வெறும் ஏழு ஆதாரங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

''இயேசு திரு முழுக்குப் பெற்றவுடன் வானம் திறந்ததையும், கடவுளின் ஆவி புறா இறங்குவது போலத் தம்மீது வருவதையும் கண்டார். அப்போழுது 'என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது! (மத்தேயு 03;17)

''அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்த போது ஒளிமயமான மேக மொன்று அவர்கள் மேல் நிழலிட்டது. அந்த மேகத்தினின்று 'என் அன்பார்ந்த மைந்தன் இவரே, இவர்பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்கு செவி சாயுங்கள்' என்று ஒரு குரல் ஒலித்தது''(மத்தேயு 17;5,6)

பிசாசு பிடித்த ஒருவன் ''இயேசுவே, உன்னத கடவுளின் மகனே உமக்கு இங்கு என்ன வேலை. கடவுள் மேல் ஆணை! என்னை வதைக்க வேண்டாம் என்று உரத்த குரலில் கத்தினான்(தீய ஆவி) (மாறகு 5,7).

''யோவான் அவரைக்(இயேசு) குறித்து 'எனக்குப்பின் வரும் இவர் என்னைவிட முதலிடம் பெற்றவர். ஏனெனில் எனக்கு முன்பே இருந்தார் என்று நான் இவரைப்பற்றியே சொன்னேன்''(யோவான் 1;15)

''இயேசு அவர்களைப் பார்த்துக் கூறியது 'மகன் தாமாக எதையும் செய்ய இயலாது. தந்தையிடம் தாம் காணும் செயல்களையே செய்ய இயலும். தந்தை செய்பவற்றை மகனும் அவ்வாறே செய்கிறார் என தான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்''(யோவான் 5;19)



# இரத்தம்சிந்தி வளர்க்கப்பட்டதுதான் கிறிஸ்தவம்...



இன்று உலகத்தில் மூன்றில் ஒருவர் கிறிஸ்தவர், அடுத்த மூன்றில் ஒருவர் பிற மதமானாலும் அவர்கள் இயேசுவையும் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பவர். மீதமுள்ள மூன்றில் ஒருவர் மட்டுமே தமது வேறு மார்க்கத்தில் வைராக்கிய முள்ளவர்.

வெறும் இரண்டாயிரம் வருடங்களில் உலகத்தையே அசைத்துப் பார்க்கும் இந்த இயேசுவைப் பற்றி எடுத்துக் கூறி மாற்றத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் இயேசுவின் சீடர்களான வெறும் பன்னிரெண்டு பேர்தான்!

இயேசு, படிப்பறிவில்லாத மீனவ இனத்திலிருந்து தான் தன்னுடைய பன்னிரெண்டு சீடர்களையும் தெரிந்து கொண்டார்.



இவர்களின் கோழைத்தனம், இயேசுவை சிலுவையிலறைய அழைத்துச் சென்ற போதுதான்,வெளிப்பட்டது. துண்டைக்காணோம், துணியைக் காணோம் என்று நாலா திசையிலும் ஓடி ஒளிந்து கொண்ட இவர்கள், அவர் சிலுவையில் அறையப் பட்டு அடக்கம் செய்யப்பட்டது வரையில் எங்கு போனார்கள் என்றே தெரியவில்லை!



இயேசு இறந்து உயிர்த்த பின்னர் தான் பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்று வலிமை யடைந்தனர்.!
உலக மீட்பர்தாம் இந்த இயேசு என்று ஆளுக்கொரு திசையில் புறப்பட்டுப் போய் உலகத்தின் ஒவ்வொரு தேசத்துக்கும் சென்றார்கள்.

இவர்கள் என்ன பணத்தையா எடுத்துச் சென்றார்கள்.? வெறும் ‘சிலுவை’ ஒன்று தான் மூலதனம்.!

பொதுவாக, சில இந்துத்வா நண்பர்கள் கூறுவது போன்று எதை வைத்து ஏமாற்றி அவர்களை மாற்ற முடிந்தது...?

ஒருவரைத் தவிர மீதம் பதினொரு பேரும் இயற்கையாகச் சாகவில்லை! இயேசுவின் தலைமைச் சீடராகிய பேதுருவை ரோமானிய அதிகாரிகள் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். இயேசுவை சிலுவையில் அறைந்தது போன்றல்ல என்னை தலைகீழாக அறையுங்கள். ஏனென்றால் கடவுளாகிய அவருக்கு நிகராக நான் நேராக சிலுவையில் அறையப் படுவது தவறு என்று நெஞ்சை நிமிர்த்தினார் அவர்!



அடித்துக் கொல்லப்பட்ட அப்போஸ்தலர் புனித ஜேம்ஸ்



தலைகீழ் சிலுவையில் அறையப்பட்ட புனித பிலிப்

எப்படி இந்தத் துணிவு, வைராக்கியம் வந்தது....?

இன்னொரு சீடர் ஆண்ட்ரூ, தூக்கிலிடப்பட்டார்.

இயேசுவை அன்றொரு நாள் மறுதலித்த அதே தோமையார் என்ற சீடர்தான், நமது சென்னைக்கு வந்தார். கூரான பழுக்கக் காய்ச்சிய




ஈட்டிகளால் குத்தப் பட்டு புனித தோமையார் மலையில் மரணமடைந்தார். அவரது கல்லறை சாந்தோம் தேவாலயத்தில் இன்றும் உள்ளது.

பார்த்தலேமியு என்ற சீடரையும் சிலுவையில் அறைந்தே கொன்றார்கள்.

ஜேம்ஸ் என்ற சீடர் உயரத்திலிருந்து கீழே தள்ளப்பட்டு, குற்றுயிராகக் கிடந்த அவரை அடித்து நொறுக்கி சித்திரவதை செய்து கொன்றார்கள்.

சைமன் என்ற சீடர் இயேசுவை மறுதலிக்காத காரணத்தால், சிரியா நாட்டு அதிபரால் சிலுவையில் அறையப்பட்டார்.

இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் என்ற சீடருக்குப் பின்னர், அவருக்குப் பதிலாக சேர்த்துக்



சிலுவையில் அறையப்பட்ட புனித மத்தியாஸ்



கொள்ளப்பட்ட மத்தியாஸ் என்ற சீடரையும் சிலுவையில் அரைந்தே கொன்றார்கள்.

பவுல் என்ற சீடன் தலை துண்டிக்கப் பட்டு இறந்தார்.

பேதுருவைப் போன்றே பிலிப் என்ற சீடர் சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு உயிரிழந்தார்.

**ஜான் என்ற அப்போஸ்தலர் (சீடர்) தவிர கிறிஸ்துவின் 12 சீடர்களுள் மீதமுள்ள அனைவருமே ஈவிரக்கமில்லாமல் கொலை செய்யப்பட்டு, அவர்கள் சிந்திய இரத்தத்தில் விதைக்கப்பட்டு, இன்று இந்த நிலைக்கு வளர்ந்ததுதான் கிறிஸ்தவம்....!** ●





**கை கால்களில் கயிற்றை கட்டி நாலா திசையிலும் இழுத்து உடல் உறுப்புகளைப் பிய்த்து, சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட புனிதர்....**

# நாளும் தெரிந்த இசைஞானிக்கு... .. இன்றுவரை தெரியாதது..


இசைஞானி இளைய ராஜா! இவர் பாடிய பாடல்களுக்கு மயங்காதவர் யாருமேயில்லை. பி.பி.சி என்ற உலகளாவிய நிறுவனம் நடத்திய 165 நாடுகளிலுள்ள மக்கள் கலந்து கொண்ட உலக இசை வல்லுனர்கள் சர்வேயில் முதல் பத்து இடங்களில் ஒன்றைப் பிடித்தவர்தாம் இளையராஜா என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

சுமார் ஏழாயிரம் பாடல்கள், 20,000க்கும் மேற்பட்ட இசைக்கச்சேரிகள், கலைமாமணி என்ற தமிழக அரசு விருது, பத்மபூஷன் விருது, பத்ம விபூஷன் உட்பட உயர்ந்த மத்திய அரசு விருதுகள், என்று உலக மகா சாதனைக்குச் சொந்தக்காரர்தான் இவர். இவரது சொந்த மகன் கூட இவர் நம்பும் ரமண மகரிஷியின் மார்க்கத்தை விட்டுவிட்டு இஸ்லாத்தைத் தழுவிய செய்தி தனிக்கதை!.


தோற்றத்தில் சன்னியாசி போன்றிருக்கும் இளைய ராஜாவுக்கு மானசீக குரு, சன்னியாசியான ரமண மகரிஷி. ரமண மகரிஷியையும், இயேசு கிறிஸ்துவையும் ஒப்பிட்டு சமீபத்தில் 'கூகுள்' நிறுவன நிகழ்ச்சியொன்றில் இவர் கூறிய கருத்துக்கள் தான் இப்போழுது சர்ச்சையாகி இருக்கிறது.



ரமண மகரிஷி தனது 16 வயதில் இறப்பு என்றால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்த்தாராம். நினைக்க நினைக்க உண்மையிலேயே இறந்துவிட்டாராம். பின்னர் உயிர்ந்தெழுந்துவிட்டாராம். உலகில் உயிர்த்தெழுந்த ஒரே நபர் இவர்தானாம்!. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தற்கு சான்று இல்லையாம். சமூக வலைத்தளங்களுள் ஒன்றான யூட்யூபில்







இந்த செய்தியைப் பார்த்தாராம்.

நமது கேள்வி...

யூட்யூபில் செய்தி வர வைப்பதற்கு சாதாரண சுப்பனாலும் முடியும். அது ஒரு பெரிய விஷயமல்ல. ஆனானப்பட்ட யூட்யூபைப் பார்க்கத் தெரிந்த இளையராஜாவுக்கு இதே ரமண மகரிஷி என்பவர் கேன்சர் நோயில் இறந்து மண்ணோடு மண்ணாகியவர் என்பதும், ஆனால் இயேசு கிறிஸ்து, தான் முன்னறிவித்த ஏராளமான முன்னறிவிப்புகள் மற்றும் பழைய ஏற்பாட்டில் விரவிக்கிடக்கும் எராளமான தீர்க்கதரிசனங்களின் படியே மூன்றாம் நாள் உயிர்த்து இன்று உலகத்தின் பாதி மக்களுக்கும் மேலானவர்கள் ஏற்றுக் கொள்ளும் பெருமைக்கு சொந்தக்காரர் என்பதும் ஏன் இந்த இளையராஜாவுக்கு தெரியவில்லை..?

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பல்வேறு நாடுகளுக்கும் அறிவிக்கச் சென்ற இடங்களில் உயிரோடு தலைகீழாக சிலுவையிலறைபட்டு, தோலுரிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு இறந்து இரத்த சாட்சியாகி மரித்தார்களே அவரது அனைத்து பதினொரு சீடர்களும், அவர்கள் விதைத்த விதையின் பலனாக இன்று 300 கோடி மக்கள் கிறிஸ்தவர் என்ற அடையாளத்தில் உலக முழுவதும் பறை சாற்றிக் கொள்ளுபவர்களாக இருக்கிறார்களே அது எப்படி என்று ஏன் இளையராஜாவுக்கு சிந்திக்கத் தெரியவில்லை..?

இயேசு உயிர்த்தது மட்டுமல்ல, தனது சீடர்களுக்கும் உயிர்த்தெழும் வல்லமையைக் கொடையாகக் கொடுத்து இன்று திருச்சபையால், அங்கீகரிக்கப்பட்ட ஏராளமான புனிதர்கள் சுமார் 400 பேரை இயேசுவின் நாமத்தால் உயிர்த்தெழ வைத்தார்களே, அதுவுங்கூட அவரது கண்ணுக்குத் தெரியவில்லையா...?

ஒன்றல்ல.. இரண்டல்ல.. சுமார் பத்தாயிரம் அற்புதப்புனிதர்களை உலகுக்குக் கொடுத்து அவர்களும் தனது பங்குக்கு இயேசுவின் சாட்சியாய் ஆயிரமாயிரம் அற்புதங்கள் புரிந்து. இயேசு உயிர்த்ததற்கு சான்றாய் நிற்கிறார்களே இவற்றையும் கூட கேள்விப்படாதவரா இந்த இளையராஜா...?

R. Dis. No. 56273/97-E

இதுவரை உலகெங்கும் 20 கோடி மக்கள் இயேசுவை மறுதலிக்க மாட்டோம் என்று சபதமெடுத்த காரணத்தால் கொல்லப்பட்டு உயிரிழந்திருக்கிறார்களே, அவர்களை இயக்கிய சக்தி எனன என்பதை ஆராயும் மனம் ஏன் இல்லாமல் போய்விட்டது இந்த இளையராஜாவுக்கு?

"வானமும் பூமியும் ஒழிந்துபோம்.. என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை.." என்று கூறிய இயேசு, உலக முடிவுக்கு அடையாளங்களாக முன்னறிவித்த அத்தனை காரியங்களும் அணு பிசகாது, உலகமெங்கிலும் நடந்தேறுகிறதே, இது பற்றிய 'யூட்யூப்' செய்திகளை மட்டும் இளையராஜா தவிர்த்து விடுவாரோ..?

இன்று தெருவுக்கு தெரு இயேசுவின் நாமத்தில் ஒன்றாகக்கூடி ஜெபிக்கும் ஏராளமானவர்கள் அன்றொரு நாள் கொடிய மனதுடன், வியாதிகளுடனும் இருந்து இன்று இயேசுவின் நாமத்தால் விடுதலை பெற்று, சகல நெருக்கடிகளுக்கிடையே நற்செய்தியை எடுத்துச் சொல்லும் நிலைமையை இளையராஜா பார்க்காதது ஏனோ..?

நம்பத்தகாத ஆயிரக்கணக்கான ஜீபூம்பா கதைகளைக் கொண்டு உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலுமுள்ள தல புராணக் கதைகளை நம்பும் இளையராஜாவுக்கு, தன்னையே தியாகபலியாக்கிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய உண்மைகளை எடுத்துக்கூறும் கோடிக் கணக்கான சம்பவங்களின் ஒன்றைக்கூட நம்பும் தன்மை ஏன் வரவில்லை..!

**நாலும் தெரிந்த இந்த இசைஞானிக்கு இந்த சிறிய ஞானம் கூட இல்லையே என்பது தான் நமது ஆதங்கம்.** ●



Owned and published by M.Xavier Chandrakumar from 1/448, Pillaiyar Koil Street,Kelambakkam. Kanchipuram Dist-603 103 and Printed by Syed Azamadullah, at Sharp Printers,324 Triplicane High Road,Chennai-600 005. Editor M. Xavier Chandrakumar.